விலை: 30.00
பக்கங்கள் : இருபது
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram
WESTERN UNION WU
Ria
Moving Money for better
உறவுகளிமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-1928)

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 31 செவ்வாய்க்கிழமை (13.04.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 115

### யாழ்ப்பாணத்தில் பொலிஸ் ஒருவருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப் ▶19

## வெளிநாட்டு தொடர்பைக் கொண்ட சிலர் இராணுவத்துக்கு எதிராக பொய்ப் பிரசாரம்



### யாழில் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா

*(யாழ்ப்பாணம்)*

வெளிநாட்டுத் தொடர்பைக் கொண்ட சிலரே இலங்கை இராணுவத்துக்கு எதிராக பொய்ப் பிரசாரம் செய்வதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா யாழில் வைத்து தெரிவித்துள்ளார். *(10ஆம் பக்கம் பார்க்க)*

# சவேந்திர சில்வாவின் குற்றங்கள் குறித்த 50 பக்க ஆவணம்



### ஜஸ்மின் சூக்காவால் பிரிட்டனிடம் சமர்ப்பிப்பு

*(கொழும்பு)*

இலங்கை இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவின் குற்றங்கள் குறித்த 50 பக்க ஆவணக் கோவையைத் தொகுத்து அதனை இங்கிலாந்திலுள்ள வெளிநாட்டு பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் தடைகள் திணைக்களத்திடம் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம் சமர்ப்பித்துள்ளது. *(19ஆம் பக்கம் பார்க்க)*

### வடக்கு உட்பட 6 மாகாணங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

நாட்டில்வடக்கு உட்பட ஆறு மாகாணங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி மத்திய மாகாணம், சப்ரகமுவ, மேல் மாகாணம், ▶19

### வாந்தி எடுத்ததில் மயங்கி விழுந்த இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

சோடா குடிப்பதற்காக வாய் கொப்பளித்த இளைஞன் ஒருவர் வாந்தி எடுத்து மயங்கிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோதும் அவர் சிகிச்சை ▶19

## யாழில் 8 பேர் உட்பட 9 வடக்கில் நேற்று பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 8 பேர் உட்பட வட மாகாணத்தில் 9 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக யாழ் போதனா ▶19

## முதியவரை படுகொலை செய்து மீசாலை கிழக்கில் கொள்ளை

### மூன்று பேர் கொண்ட கும்பல் அராஜகம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீசாலை கிழக்கு ஊர் எல்லைப் பகுதியில் திங்கட்கிழமை அதிகாலை வேளையில் முதியவர் ▶19

## திருநெல்வேலியில் விடுவிக்கப்படுவதாக சுகாதாரப் பணிப்பாளர் அறிவித்த பகுதியில்

### பொலிஸ், இராணுவம் தொடர்ந்து கட்டுப்பாடு தமக்கு கட்டளை வரவில்லை எனவும் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருநெல்வேலி - பாற்பண்ணை பகுதியில் பாரதிபுரம் கிராமம் தவிர்ந்த மற்றைய பகுதிகள் விடுவிக்கப்படுவதாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், ஆ.கேதீஸ்வரன் அறிவித்திருந்தபோதும்தொடர்ந்தும் கண்காணிப்பு ▶19

## அல்லாரையில் இளைஞர்களை வழிமறித்து தாக்குதல்

### அவர்கள் பயணித்த மோ.சைக்கிளும் தீ வைத்து எரிப்பு



(சாவகச்சேரி)

மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இரு ▶19

### சாவகச்சேரியில் கோர விபத்து ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்.சாவகச்சேரி நகரில் நேற்று இரவு 10.40 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே ▶20

## போலிப் பிரசாரத்தை கட்டுப்படுத்த சட்டம்

### இவ்வாரம் அமைச்சரவைக்கு வருகின்றது

(கொழும்பு)

இணையத்தளங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களின் ஊடான போலிப் பிரசாரங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் புதிய சட்டத்தைக் கொண்டு ▶19

### மின்சாரம் தாக்கியதில் இளம் குடும்பஸ்தர் பலி

### நல்லூரடியில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

வீடு கழுவும்போது மின்சாரம் தாக்கியதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று இரவு ▶20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**




# மரண அறிவித்தல்



## இளையபிள்ளை கிருஷ்ணன்

**தோற்றம் : 25.03.:925**
**மறைவு : 12.04.2021**

கரவெட்டி மத்தியை பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையபிள்ளை கிருஷ்ணன் நேற்று (12.04.2021) திங்கட்கிழமை கால மாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு கிருஷ்ணனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சரஸ்வதி, ஸ்ரீகரன் (ஓய்வுபெற்ற CTB நேரக் கணிப்பாளர்), சிறிபாலசுந்தரம் (ஓய்வுபெற்ற பிரதி மாகாண விவசாய பணிப்பாளர்), சுசீலாதேவி, றஞ்சினிதேவி (ஆசிரியர் - யா/ விக்னேஸ்வரா கல்லூரி, கரவெட்டி), ஸ்ரீபாஸ்கரன் (கிளி. மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர்), காலஞ்சென்ற சாந்தினிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் சரஸ்வதி, ரதினி, சிவலிங்கம், சிவசபேசன், பாமிலா ஆகியோரின் அன்பு மாமியாரும் பல்லவி, சுரேஸ், ஆரபி, ரிஷபன், சிந்துஜா, சாகித்தியா, லவன், சந்திரிக்கா, மதுஷன், நர்த்தனன், ஐதுர்ஷனன், சுவாதிகா, ஸ்ருதிகா, சுவேனிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.04.2021) செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (C-1964)

ஆசிவளவு,
கரவெட்டி மத்தி.

தகவல்:-
குடும்பத்தினர்

# வவுனியாவில் குளக்கட்டினுள் வீழ்ந்து முச்சக்கரவண்டி விபத்து

## சாரதி படுகாயம்

(வவுனியா)

வவுனியா வைரவப்புளியங்குளம் குளக்கட்டினுள் முச்சக்கரவண்டியொன்று வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று திங்கட்கிழமை இரவு 7.00 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

கூமாங்குளம் பிரதான வீதியூடாக வவுனியா நகர் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கரவண்டி வைரவப் புளியங்குளம் குளக்கட்டினை அண்மித்த சமயத்தில் வாகனம் சாரதியின் கட்டுப் பாட்டையிழந்து குளக்கட்டினிலிருந்து கீழே வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் முச்சக்கரவண்டியின் சாரதி காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் முச்சக்கரவண்டியினை மீட்கும் பணியில் பொதுமக்கள் ஈடுபட்டுள்ளனர். (ம-03)

# 1 இலட்சத்து 48 ஆயிரத்து 750 பேருக்கு யாழில் 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு

## யாழ். அரச அதிபர் மகேசன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)


யாழ்.மாவட்டத்தில் சுமார் 1 லட்சத்து 48 ஆயிரம் பேருக்கு அரசாங்கத்தின் 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங் கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட செயலர் க.மகேசன் கூறியுள்ளார்.

இது குறித்து யாழ்.மாவட்ட செயலர் மேலும் கூறியுள்ளதாவது, 1 இலட்சத்து 48 ஆயிரத்து 750 பேர் வரை தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.

யாழ். மாவட்டத்தில் சமுர்த்தி பெறும் குடும்பங்கள் சமுர்த்திக்காக காத்திருப் போர் பட்டியலில் உள்ள குடும்பங்கள், விசேட தேவையுடையோர் மற்றும் மாற்று த்திறனாளிகள் உள்ளிட்ட 7 வகைப் பாட்டினருக்கு குறித்த உதவித்தொகை வழங்கப்படு கின்றது.

மாவட்டத்தில் 15 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் குறித்த கொடுப்பனவுகள் நேற்று திங்கட்கிழமை காலை முதல் அதற்கான உத்தியோகத்தர்களால் வழங் கப்பட்டு வருகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (ம-03)

# மரண அறிவித்தல்



## திரு. செல்லையா இராசலிங்கம் (நாகையா)

யாழ். வேலணை கிழக்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும் முரசுமோட்டை, 1 ஆம் யூனிற்றை வதிவிடமாகவும் பிரான்சை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா இராசலிங்கம் கடந்த 01.04.2021 (வியாழக்கிழமை) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்யைா - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்வராசா - முத்துப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும் பதிவிரதாசிரோன்மணியின் (இராசாத்தி) அன்புக் கணவரும் பகீரதி (ஆசிரியை), சாந்தரூபி (சுதா), சாந்தினி (உஷா), நவசீலன் (ராசன்), தவச்செல்வன் (குட்டித்தம்பி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான நவரட்னம்மா, நாகரத்தினம், பாக்கியம், யோகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் விவேகானந்தராசா (ஆனந்தன்), சத்தியகுமார் (ராசன்), சண்முகானந்தவேல் (அப்பு), சுகிர்தா, தர்சினி (சுரேகா) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி, வைத்திலிங்கம், சபாரட்ணம் மற்றும் சௌந்தரம் மற்றும் பராசக்தி காலஞ்சென்றவர்களான நவரட்ணசிங்கம், நித்தியலட்சுமி மற்றும் மகேஸ்வரி, பாலசுப்ரமணியம் (பூபாலசிங்கம்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் காலஞ்சென்ற காசிலிங்கம் மற்றும் மனோன்மணி, கந்தசாமி, காலஞ்சென்ற முத்துலிங்கம் மற்றும் இராஜேஸ்வரி ஆகியோரின் சகலனும் விவேசன், கபிலன், அபிரா, சனோஜன், அங்கீரா, அட்சயன், அட்சிகா, அபிசிகா, அங்கவி, அருசன், அகானா, ஆரணா, அதிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.04.2021) செவ்வாய்க்கிழமை பிரான்சில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (6562)

கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
க. ஞானரூபி ( மருமகள் - கருணா )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரம்பரை அரசியல் கேள்விக்கு உட்படுத்தப்படும் என்பதால்

# மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் அஞ்சுகிறது

(கிளிநொச்சி)

**பரம்பரை அரசியல் கேள்விக்கு உட்படுத்தப்படும் என்ற அச்சத்தில் அரசு மாகாண சபை தேர்தலை நடத்த அஞ்சுகின்றது எனப் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்தார்.**



கிளிநொச்சியில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு மாகாண சபை தேர்தல் தொடர்பில் ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறுவது சம்பந்தமாக எங்களுக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. எந்த முறையில் மாகாண சபை தேர்தல் நடத்தப்பட வேண்டும், எப்போது நடத்தப்பட வேண்டும் என அரசாங்கம் தீர்மானித்தால் நாங்கள் அந்த மாகாண சபை தேர்தலை எதிர்கொள்ள தயாராக உள்ளோம்.

குறிப்பாக மாகாண சபை என்பது வடக்கு, கிழக்கில் வாழுகின்ற தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசைகளை நிறைவு செய்வதற்கான ஒரு ஆரம்பப் புள்ளியாகவே கொண்டு வரப்பட்டது. அந்த அடிப்படையில் மாகாண சபை தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும்.

அது என்ன முறையில் நடத்தப்பட வேண்டும், எப்போது நடத்தப்பட வேண்டும் என்பதற்கு அப்பால், விரைவாகவும் வேகமாகவும் அந்த மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

அத்தேர்தலை நடத்தி உடனடியாக மாகாண சபைகளில் அதிகார பரவலாக்கல், அதன் ஊடான மக்கள் பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும்.

19ஆம் திகதி தீர்மானிக்கின்ற திகதியென்பது பல முறை அவர்களால் சொல்லப்பட்ட செய்திகள். இன்னுமின்னும் அதன் காலம் இழுத்தடிக்கப்படலாம். காலத்தை இழுத்தடிக்கப்படாமல் உடனடியாக முடிவு எடுக்கப்பட வேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

விரக்தி அடைந்திருக்கின்ற சிங்கள மக்கள் அரசுக்கு எதிராக கட்டாயம் வாக்களிப்பார்கள். அந்த வாக்களிப்பு என்பது இந்த அரசை கட்டாயம் ஆட்டம் காணச் செய்யும். அடுத்து அவர்களின் அரசியல்பாரம்பரியம் அல்லது பரம்பரை அரசியல் என்பது கேள்விக்குட்படுத்தப்படும் என்ற பயத்தின் காரணமாகவே அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை நடத்த பின்னடிக்கின்றது" என அவர் மேலும் தெரிவித்தார்.(நி-4)

## மக்கள் ஒத்துழைத்தாலே பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க முடியும்

### சரத் வீரசேகர

(கொழும்பு)

நாட்டில் அடிப்படைவாத் கொள்கைகளுடன் பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்கள் குறித்து கண்டறிவதற்கு பொது மக்களின் உதவி அவசியம் என பொதுமக்கள்பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

சில அடிப்படைவாத கோட்பாடுகளுடன் ஏனைய மதத்தினர் மீது சிலர் தாக்குதல் நடத்துகின்றனர்.

இதுவே கடந்த 2 வருடங்களுக்கு முன்னர் ஏப்ரல் 21 பயங்கரவாத தாக்குதல் இடம்பெறுவதற்கு முக்கிய காரணமாக அமைந்தது.

அவ்வாறான அடிப்படைவாத கொள்கைகளுடன் உள்ளவர்கள் முதலில் கண்டறியப்பட வேண்டும்.

அவ்வாறான அடிப்படைவாத கொள்கைகள் இல்லாது செய்யப்பட்டாலே நாட்டின் எதிர்கால பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும்.

குறித்த நபர்களை கண்டறிவதற்கு முப்படையினராலும், புலனாய்வுப்பிரிவினராலும் மாத்திரம் இயலாது.

அதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பும் மிக அவசியமாகும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். (நி-4)

## ஸ்மார்ட் போன்களை அதிகமாகப் பாவிப்பது புற்றுநோயை ஏற்படுத்தும்-மருத்துவர் லசந்த

(கொழும்பு)

ஸ்மார்ட் போன்களை அதிகமாக பயன்படுத்துவ தால் புற்றுநோய் உள்ளிட்ட பல்வேறு நோய்கள் ஏற்படும் ஆபத்து இருப்பதாக குடும்ப சுகாதார பணியகத்தின் வாழ்க்கை முறை மற்றும் உளவியல் ஆலோசகர் மருத்துவர் லசந்த விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக உலக சுகாதார அமைப்பு உட்பட பல்வேறு அமைப்புக்கள் கருத்து தெரிவித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்மார்ட்போனிலிருந்து வெளிப்படும் மின்காந்த அலைகள் புற்றுநோய் மற றும் பிற நோய்களை ஏற்படுத்தக்கூடியவை.

ஒரு ஸ்மார்ட்போன் மூலம் வெளிப்படும் மின்காந்த அலைகள் நீண்ட நாள் நோய்களுக்கு வழிவகுக் கும்.

குறிப்பாக மூளை தொடர்பான நோய்கள், மார்பக புற்றுநோய், ஆண்மைக் குறைவு ஏற்படுத்தல், குழந்தைகளில் கவனம் குறை தல், சமூகப்பிரச்சினைகள் போன்றவை ஏற்படலாம்.

அதனால் தான் நாம் ஸ்மார்ட்போன்களின் பயன்பாட்டை மட்டுப்படுத்தி ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (நி-4)

## தேர்த்திருவிழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தில் இரதோற்சவம் நாளை 14 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.30க்கும் மறுநாள் 15 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.30க்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

கலந்து கொள்ளும் அடியார்கள் கொவிட்-19 சுகாதார நடைமுறைகளை தவறாது பின்பற்றி கலந்து கொண்டு அருள் பெற்றுய்யுமாறு ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (5-4-30)

## வருடாந்தப் பொங்கல் விழா

(குப்பிழான்)

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி ஆலய வருடாந்தப் பொங்கல் விழா இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது. இன்று காலை 6 மணியளவில் பொங்கல் விழா ஆரம்ப மாகும்.

தற்போதைய கொரோனா கால சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றிப் பொங்கல் விழா நடைபெறும் என மேற்படி ஆலயத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அறிவித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து



பிற்பகல் 4 மணியளவில் பூசைகள் நடைபெற்று பிற்பகல் 5.30 மணியளவில் துர்க்கை அம் பாள் வீதியுலா வருதலும் இடம்பெறுமென வும் தெரிவித்துள்ளார். (5-4-18)

## சீன அபிவிருத்தி வங்கியுடனான ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்து

(கொழும்பு)

சீனாவின் அபிவிருத்தி வங்கியுடன் 500 மில்லியன் டொலர் கடன் ஒப்பந்தத்தில் இலங்கை அரசாங்கம் கைச்சாத்திட்டுள்ளது.

குறித்த நிதி இந்த வாரம் கிடைக்கப்பெறும் என நிதியமைச்சு அறிக்கை ஒன்றின் மூலம் அறிவித்துள்ளது.

பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு குறித்த நிதி பங்களிப்புச் செய்யும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொகையின் ஒரு பகுதியாக குறித்த நிதி வழங்கப்பட்டுள்ளதாகவும் ஏற்கனவே கடந்த ஆண்டு 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் வழங்கப்பட்டதாகவும் நிதியமைச்சு அறிவித்துள்ளது. (நி-4)

## சிரேஷ்ட உறுப்பினர்கள் மூவருக்கு அமைச்சுப் பதவி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்களான எஸ்.பி.திஸாநாயக்க, டிலான் பெரேரா, மற்றும் அநுர பிரியதர்ஷன யாப்பா ஆகியோருக்கு புத்தாண்டுக்கு பிறகு அமைச்சரவை அமைச்சு பதவி அல்லது இராஜாங்க அமைச்சு பதவிகளை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அரசியல் வட்டாரங்களில் குறிப்பிடப்படுகிறது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கும், பொதுஜன பெரமுனவின் பங்காளிகட்சிகளுக்கும் இடையில் எதிர்வரும் திங்கட்கிழமை விசேட பேச்சு வார்த்தை இடம் பெறவுள்ள நிலையில் இவ்வாறு அமைச்சரவையில் மாற்றம் ஏற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே.சி.சி.சி.வெற்றிக்கிண்ணம்- 2021 2 வது சுற்றுக்கு ஓல்ட்கோல்ஸ் அணி தகுதி

கே.சி.சி.சி.வெற்றிக் கிண்ணத்திற்காக கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகம் 28 ஆவது ஆண்டாக நடத்தும் 30 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் முதலாவது சுற்றில் 4 ஆவது போட்டி கடந்த வார இறுதியில் நடைபெற்ற போது ஓல்ட்கோல்ஸ் அணி கிறாஸ்கொப்பர்ஸ் அணியை 4 இலக்குகளால் வெற்றி பெற்று 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்பர்ஸ் அணி 22.1 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றனர். வரலக்ஸன்-11, அஜித்-25, சுஜீபன்-38 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் ஓல்ட் கோல்ஸ் அணி சார்பாக கஜேந்திரன்-04, பிரியலக்ஸன், ஜின்துசன் தலா-02 இலக்கினையும் நிரோஸன், சின்துஜன் தலா-01 இலக்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஓல்ட்கோல்ஸ் அணி 27.4 ஓவர்களில் 06 இலக்குகளை இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றனர். மதூஸன் 12, கஜீபன்-13, மாதவரூபன்-15, கஜேந்திரன் 32 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் அஜித்-03,ஜனன்தன்-02, மதூஸன்-01 இலக்கினை கைப்பற்றினர். இப் போட்டியில் வெற்றி பெற்ற ஓல்ட்கோல்ஸ் அணி இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு 2 ஆவது சுற்றில் 12 ஆவது போட்டியில் யாழ். சென்றல் அணியை எதிர் கொள்வர் என்பது குறிப்பிடத்தக்கது. (4-6)



## ஐதராபாத் அணிக்கு எதிரான ஆட்டத்தில் கொல்கத்தா அணி 10 ஓட்டங்களால் வெற்றி



14 ஆவது ஐ.பி.எல். இருபது-20 கிரிக்கெட் தொடரின் மூன்றாவது லீக் ஆட்டம் நேற்று முன்தினம் சென்னை, சேப்பாக்கம் மைதானத்தில் டேவிட் வோர்னர் தலைமையிலான சன்ரைசர்ஸ் ஐதராபாத் மற்றும் இயன் மோர்கன் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகளுக்கிடையே நடைபெற்றது.

போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஐதராபாத் அணி களத்தடுப்பை



தேர்வு செய்தது. கொல்கத்தா அணியின் ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய நிதிஷ் ராணாவும் சுப்மான் கில்லும் அமர்க்களமாக ஆட்டத்தை தொடங்கினர்.

ரஷித்கான் ஒரு பக்கம் ஓட்ட வேகத்தை ஓரளவு கட்டுப்படுத்தினாலும் ஏனைய பந்து வீச்சாளர்கள் ஓட்டங்களை வாரி வழங்கினர்.

2 ஆவது விக்கெட்டுக்காக களமிறங்கிய ராகுல் திரிபா தியி பந்துகளை சிதறடித் தார். நடராஜன் தனது 3 ஆவது ஓவரில் இந்த கூட்ட ணியை உடைத்தார்.

ஓட்ட எண்ணிக்கை 146 ஆக உயர்ந்த போது திரிபாதி 29 பந்துகளில் 53 ஓட்டங்களுடன் பிடிகொடுத்து வெளியேறினார்.

மறுபுறம் சதம் அடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிதிஷ் ராணா தனது பங்குக்கு 80 ஓட்டங்களை (56 பந்து, 9 பவுண்டரி, 4 சிக்ஸர்) எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார்.

ஆந்த்ரே ரஸ்செல் தலைவர் இயான் மோர்கன் 2 ஷகிப் அல்-ஹசன் 3 ஓட்டத்துடனும் வெளியேறினர்.

இறுதியாக 20 ஓவர் முடிவில் கொல்கத்தா அணி 6 விக்கெட்டுக்கு 187 ஓட்டங்களைக் குவித்தது. ஆடுகளத்தில் தினேஷ் கார்த்திக் 22 ஓட்டங்களுடன் ஆட்ட மிழக்காதிருந்தார்.

தொடக்க ஆட்டக்காரர் வோர்னர் மூன்று ஓட்டத்துடன் பிரசித் கிருஷ் ணாவின் பந்துவீச்சில் விக்கெட் காப்பாளர் தினேஷ் கார்த்தி க்கிடம் பிடிகொடுத்தார். மற் றொரு தொடக்க வீரர் விருத்தி மான் சஹாவும் 7 ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார்.

மூன்றாவது விக்கெட்டுக்காக மனிஷ் பாண்டேவும் ஜோனி பெர்ஸ்டோவும் கைகோர்த்து அணியின் சரிவை தடுத்து நிறுத்தினர்.

இவர்கள் இருவரும் இணைப்பாட்டமாக மொத்தம் 92 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டனர். பெர்ஸ்டோ 55 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

அடுத்து களமிறங்கிய மொஹமட் நபி 14 ஓட்டங்களுடனும் விஜய் சங்கர் 11 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

கடைசி ஒரு ஓவரில் ஐதராபாத்தின் வெற்றிக்கு 22 ஓட்டங்கள் தேவைப்பட்டது. இறுதி ஓவருக்காக பந்துப் பரிமாற்றம் மேற்கொண்ட ரஸ்செல் 11 ஓட்டங்களை மாத்திரம் வழங்கி னார்.

20 ஓவர்களில் ஐதராபாத் அணியால் 5 விக்கெட்டுக்கு 177 ஓட்டங்களை மாத்திரம் எடுக்க முடிந்தது. இதன் மூலம் 10 ஓட்டம் வித்தியாசத்தில் கொல்கத்தா வெற்றி பெற்றது.

மனிஷ் பாண்டே 61 ஓட்டங்களுடனும் அப்துல் சமாத் 19 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக நிதிஷ் ராணா தெரிவானார். (4-6)

## சென்னையின் வேகப்பந்து வீச்சாளர்கள் இருவர் அடுத்த போட்டியில் இல்லை



ஐ.பி.எல். கிரிக்கெட்டில் மும்பை வான்கடே மைதானத்தில் கடந்த சனிக்கிழமை ஆட்ட த்தில் சென்னை சுப்பர் கிங்ஸ்-டில்லி கப்பிட்டல்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. இதில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது.

சென்னை அணியில் தீபக் சாஹர், ஷர்துல் தாகூர், பிராவோ, சாம் கர்ரன் ஆகிய நான்கு வேகப்பந்து வீச்சாளர்கள் இடம் பிடித்தினர். இவர்களில் எவரும் 140 கிலோ மீற்றருக்கு அதிகமான வேகத்தில் பந்து வீசக்கூடியவர்கள் அல்ல. அதேபோல் அடிக்கடி பவுன்சர் வீசக்கூடியவர்களும் இல்லை. இந்த இரண்டு சிறப்பம்சம் கொண்ட பந்து வீச்சாளருடன் சென்னை களம் இறங்க வேண்டும் என ரசிகர்கள் கருத்துக் கூறி வருகிறார்கள்.

சென்னையில் தென்னாபிரிக்காவின் லுங்கி நிகிடி, ஜேசன் பெரேண்டர்ப் ஆகிய வேகப்பந்து வீச்சாளர்கள் உள்ளனர். ஹசில்வுட் திடீரென விலகியதால் சென்னை அணிக்கு சிக்கல் ஏற்பட்டது.

லுங்கி நிகிடி தென்னாபிரிக்காவில் இருந்து வந்து கொரன்டைன் நாட்களை முடிக்கவில்லை. ஜேசன் பெரேண்டர்புக்கும் அதே நிலை தான். அதனால் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்கெதிரான அடுத்த போட்டியிலும் இருவரும் பங்கேற்கமாட்டார்கள். தற்போது இந்திய பந்து வீச்சாளர்கள், சாம் கரன் ஆகியோர் மீது கவனம் செலுத்துகிறோம் என சென்னை சுப்பர் கிங்ஸ் தலைமை பயிற்சியாளர் ஸ்டீபன் பிளமிங் தெரிவித்துள்ளார். (4-6)

## எங்கர்ஸ் அணிக்கு எதிரான கால்பந்து தொடரில் லியோன் அணி வெற்றி

பிரான்ஸில் நடைபெறும் லீக்-1 கால்பந்து தொடரில் லியோன் அணி சிறப்பான வெற்றியை பதிவு செய்துள்ளது. பார்க் ஒலிம்பிக் லியோனாய்ஸ் விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் லியோன் அணியும் எங்கர்ஸ் அணியும் மோதின.

பரபரப்பான இப்போட்டியில் ஆதிக்கம் செலுத்திய லியோன் அணி 3-0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது.

இதில் லியோன் அணி சார்பில் மெம்பிஸ் டெப்பாய் 21 ஆம் மற்றும் 83 ஆம் நிமிடங்களில் இரு கோல்கள் அடித்தார். மேலும் அணியின் மற்றொரு வீரரான லூகாஸ் பக்வெட்டா போட்டியின் 41 ஆவது நிமிடத் தில் ஒரு கோல் அடித்தார்.

லியோன் அணி புள்ளிப்பட்டியலில் 64 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும் எங்கர்ஸ் அணி 41 புள்ளிகளுடன் 11 ஆவது இடத்திலும் உள்ளன. (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய சம்மேளனம் இயங்காமையால் விவசாயிகளுக்கு பெரும் பாதிப்பு

(சாவகச்சேரி)

**சாவகச்சேரி-மட்டுவில் சந்திரபுரம் விவசாயசம்மேளனம் வருடக்கணக்கில் அங்கீகாரம் இல்லாத சபையாக, எந்தவிதமான நடவடிக்கைகளையும் முன்னெடுத்துச் செல்ல முடியாத சபையாக இருந்து வருவதாக சம்மேளனத்தின் நிர் வாகசபை உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

இது தொடர்பாக சந்திரபுரம் கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள் கருத்து தெரிவிக்கையில்,

சந்திரபுரம் விவசாய அமைப்பின் கடந்த கால நிர்வாக சபையின் கணக்கு வழக்கற்ற தன்னிச்சையான செயற்பாடுகளால் தற்போது சம்மேளனம் எந்தவொரு நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியாத இக்கட்டான சூழ்நிலையில் காணப்படுகிறது.

குறிப்பாக எமது சம்மேளனம் வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத அங்கீகரிக்கப்படாத சபையாக இயங்கி வருகிறது.

இதனால் சம்மேளனம் ஊடாக கிராமத்தில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி ஒப்பந்த வேலைகளுக்கான கொடுப்பனவுகளைக் கூட வழங்க முடியாத நிலை காணப்படுகிறது.

அத்துடன் உரமானியம் தவிர்ந்த வேறெந்த விவசாய உதவித்திட்டங்கள், பயிரழிவுகளுக்கான நட்ட ஈடுகள் எவையும் சந்திரபுரம் விவசாய சம்மேளன அங்கத்தவர்களுக்கு கிடைக்கப்பெறுவதில்லை.

சந்திரபுரம் கிராம விவசாய அமைப்பில் கடந்த 2011 தொடக்கம் 2019 ஆம் ஆண்டுவரை நிர்வாகத்தில் இருந்த சபை குறித்த காலப் பகுதியில் கையாளப்பட்ட வரவு-செலவுகளுக்கான கணக்கறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன் வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய அங்கீகரிக்கப்பட்ட சபையாக எமது அமைப்பை அங்கீகரிக்க வேண்டும்.

அங்கீகரிக்கப்படாத அமைப்பாக இருந்து வருவதனால் எமது சம்மேளனத்தில் அங்கத்தவர்களாக உள்ள ஐம்பதுக்கும் மேற்பட்ட விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். 2021 ஆம் ஆண்டிற்கான நிர்வாக சபையும் குறித்த இழுபறி நிலைமைகளால் தெரிவு செய்யப்படாமலுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக கடந்த காலங்களில் கமநலத் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்றும் எமக்கான உரிய தீர்வு கிடைக்கப் பெறவில்லை.அத்துடன் தற்போது வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் ஆகியோரின் கவனத்திற்கும் கொண்டு சென்றிருப்பதாகவும் மேலும் அவர்கள் தெரிவித்தனர். (5-4-30)



யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு அரசடிப்பிள்ளையார் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா கடந்த சனிக்கிழமை பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

(படங்கள்: ஐ.சிவசாந்தன்)

# பிலவ வருடப் பிறப்பு பூஜை வழிபாடுகள்

(குப்பிழான்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் பிலவ வருடப் பிறப்பு விசேட பூஜை வழிபாடுகள் நாளை புதன் கிழமை நடைபெறவுள்ளன.

இன்று செவ்வாய்க்கிழமை இரவு ஒரு மணியளவில் கலச அபிஷேகம் இடம் பெற்று அதனைத் தொடர்ந்து புதன்கிழமை அதிகாலை02.31 மணியளவில் வருடப் பிறப்பு விசேட பூஜை இடம்பெறும். அதனைத் தொடர்ந்து காலை-6 மணியளவில் வசந்த மண்டப பூஜை இடம் பெற்றுத் தொடர்ந்து ஆலய வளாகத்தில் அமைந்துள்ள துர்க்கா புஷ்கரணி தீர்த்தக் கேணியில் சங்கிராந்தி தீர்த்தோற்சவமும் நடைபெறும். (5-4-18)



தொல்புரம் கிழக்கு விக்கினேஸ்வரா முன்பள்ளி மாணவர்களுக்கான இலவச சீருடை மற்றும் காலணிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்பள்ளியில் நடைபெற்றது.

காலணிகளுக்கான நிதியினை தொல்புரம் விக்கினேஸ்வரா பழைய மாணவரும் தற்பொழுது புலம்பெயர் நாட்டில் வசிக்கும் ஒருவரும் சீருடைக்கான நிதியினை கனடாவில் வசிக்கும் திருமதி.கனகமலர் சண்முகநாதன் மற்றும் திருமதி. மலர்சோதி ஆகியோரும் வழங்கினர்.

(படம்: கஜந்தன்)

# வழக்குகள் இனி 19ம் திகதி

(நல்லூர்)

மல்லாகம் நீதவான் நீதிமன்றில் நேற்று திங்கட்கிழமை தவணையிடப்பட்ட விளக்கமறியல் வழக்குகள் உள்ளிட்ட அனைத்து வழக்குகளும் எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமைக்கு மறுதவணையிடப்பட்டுள்ளன. இந்த தகவலை மல் லாகம் மாவட்ட, நீதவான் நீதிமன்றப் பதிவாளர் க.கஜரூபன் அறிவித்துள்ளார்.

நேற்று சிறப்பு அரச விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளமையால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (5-4-33)




# மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்து; மூவர் படுகாயம்

(சாவகச்சேரி)

கொடிகாமம்-பருத்தித்துறை வீதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

வரணிப் பகுதியில் இருந்து கொடிகாமம் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப் பாட்டை இழந்து அவ் வீதியால் பயணித்த துவிச்சக்கரவண்டியுடன் மோதுண்டு விபத்து ஏற்பட்டது.

இவ்விபத்தில் வரணிப் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்களே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

துவிச்சக்கரவண்டியில் பயணித்த நபரும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-4-30)

# மணல் மாபியாக்களை கட்டுப்படுத்தக் கோரிக்கை

(வரணி)

தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட வரணிப் பகுதியில் கடந்த சில வருடங்களாக தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் சட்டவிரோதமான மணல் அகழ்வு இடம்பெற்று வருகிறது என அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக வயல் நிலங்கள் உவர்நிலமாக மாற்றமடைந்து வருவதாகவும் மழைகாலத்தில் வெள்ளநீர் தேங்கி குடிமனைகளுக்குள் உட்புகும் அபாயம் ஏற்படும் எனவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அதுமட்டுமன்றி விவசாய நிலங்கள் மண்ணரிப்புக்கு உள்ளாகும் நிலைமை காணப்படுவதாகவும், உவர் நீர் தடுப்பணைகளையும் மண் கடத்தல் காரர்கள் அகழ்வதால் காட்டுநீர் வயல் நிலங்களுக்குள் உட்புகுந்து நெற் பயிர்களை அழிக்கின்ற நிலை தோன்றியுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் கனரக டிப்பர் வாகனங்கள் அடிக்கடி செல்வதால் புதிதாகப் போடப்பட்டுள்ள வீதிகள் சேதமடைகின்றன்.

இந்த சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பாக கொடிகாமம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் இம் மணல் கடத்தல் தொடர்பாக உரியவர்கள் அக்கறை எடுத்து கடுப்படுத்துமாறு அப்பகுதி மக்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர் (5-4-103)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாவது அலை இலங்கையை தாக்கும்

# பொதுச்சுகாதார ஆய்வாளர்கள் கடும் எச்சரிக்கை

(கொழும்பு)

**சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு காலப் பகுதியில் சுகாதார வழிகாட்டுதல்களை பொது மக்கள் பெரிதும் புறக்கணித்தால், மே மாதத்தில் கொரோனா வைரஸின் மூன்றாவது அலை இலங்கையைத் தாக்கும் என பொது சுகாதார ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.**

பொது சுகாதார ஆய்வாளர்கள் பல எச்சரிக்கை விடுத்த போதிலும் கொரோனா வைரஸ் சுகாதார வழிகாட்டுதல்களை கண்டிப்பாக பின்பற்றாமல் பெரும்பாலான மக்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையை நடத்திச் செல்கின்றனர்.

திருமதி இலங்கை, சுற்றுச்சூழல் பிரச்சினை மற்றும் அசுத்தமான எண்ணெய் உள்ளிட்ட பல பிரச்சினைகளால், அதிகரித்து வரும் கொரோனா வைரஸ்டன் தொடர்புடைய மிகவும் தீவிரமான சிக்கலை மறைத்துவிட்டதாக பொது சுகாதார ஆய்வாளர்கள் சங்க செயலாளர் மகேந்திர பாலசூரிய ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

இதன் விளைவாக நாடு இயல்பு நிலைக்கு வந்துவிட்டதாக மக்கள் அச்சமின்றி வாழப் பழகிக்கொள்கின்றனர்.

அந்த அச்சத்தை மீண்டும் ஒரு முறை பொதுமக்களிடையே ஏற்படுத்துவது கடினம் என்றும் அவர் தெரிவித்தார்.

மூன்றாவது அலை நம்மைத் தாக்கும்போது மட்டுமே இது எவ்வளவு தீவிரமானது என்பதை மக்கள் புரிந்துகொள்வார்கள் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் இப்போது மிகவும் தாமதமாகிவிட்டது என்றும் விளைவுகளை சந்தித்து அதை சமாளிக்க வேண்டும்.

அதன்படி, மே முதல் புதிய கொத்தணிகள் தோன்றுவதை சமாளிக்க அதிகாரிகள் இப்போதே மருத்துவமனைகள் மற்றும் ஏனைய வசதிகளை தயார் செய்ய வேண்டும் என்றும் பாலசூரிய தெரிவித்தார்.

இதேநேரம், தடுப்பூசி போடப்படுவதால், அவை 100 சதவீதம் பாதுகாப்பானவை என்று மக்கள் கருதுகிறார்கள். ஏனைய நாடுகளில் பெரும்பாலானவர்களுக்கு தடுப்பூசி போடப்பட்ட போதிலும் மூன்றாவது மற்றும் நான்காவது அலைகள் ஏற்பட்டுள்ளன. இதன் விளைவாக புதிய முடக்க கட்டுப்பாடுகளும் அறிவிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (நி-4)

## புத்தாண்டின் பின் பல்கலைக்கழகங்கள் திறக்கப்படும்

(கொழும்பு)

அனைத்துப் பல்கலைக்கழகங்களும் புத்தாண்டின் பின்னர் மீண்டும் திறக்கப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பல்கலைக்கழகங்களை மீண்டும் திறப்பது தொடர்பான விசேட சுற்றறிக்கை தயாரிக்கப்படுகிறது. இந்த ஆலோசனைகள் எதிர்காலத்தில் வெளியிடப்படும்.

பல்கலைக்கழக ஊழியர்களுக்கு கொரோனா வைரஸிற்கான தடுப் பூசி ஏற்றப்பட்டதன் பின்னர் கல்வி நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்க ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது.

மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு வருவதை தாமதப்படுத்த முடியாது என்பதால் சுகாதாரப் ஆலோசனைகளுக்கு அமைய கல்வி நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டதாக ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.(நி-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 53 செவ்.சூரி 8 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: இன்சினியர்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண், உள்நாடு மட்டும்.
தொ.இ: B/11752

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 39 செவ் 1 சூரி 8 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: **MBBS Doctor**
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண், உள்நாடு மட்டும்
தொ.இ: B/11755

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: செவ் 4 சூரி 3 இல்
உயரம்: 6'3"
தகைமை/தொழில்: **HNDA, USA Super Market Work (PR உண்டு)**
எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச, தனியார் தொழில், உள்நாடு மட்டும்
தொ.இ: B/11758

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: செவ் 9 சூரி 6 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: அரச தொழில்நுட்ப உதவியாளர்
எதிர்பார்ப்பு: அரச தொழில், உள்நாடு மட்டும்
தொ.இ: B/11760

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 65 செவ் 3 சூரி 1 இல்
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: சொந்தக்கடை,வியாபாரம், சுயதொழில், வெளிநாடும் விரும்பத்தக்கது
தொ.இ: G/3323

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 27 ¾ செவ் 1 சூரி 2 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: கலைப்பட்டதாரி, அரச அபிவிருத்தி உத்தியோகம்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் சம வயது பிரச்சினை இல்லை, வெளிநாடும் விரும்பத்தக்கது.
தொ.இ: G/3345

பிறப்பு: 1979 இந்து
தகைமை/தொழில்: B.A, அரச ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், உள்நாடு மட்டும்
தொ.இ: G/3370

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 37 செவ் 4 சூரி 7 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: பட்டதாரி, விவசாய போதனாசிரியர்
எதிர்பார்ப்பு: கூடிய விருப்பம் வெளிநாடு, பட்டதாரி
தொ.இ: G/3376

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


## வறட்சி காரணமாக அதிகரிக்கும் மின் பாவனை

(கொழும்பு)

நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக நாளாந்த மின்சார தேவை அதிகரித்துள்ளது என மின்சக்தி அமைச்சு அறிவித்துள்ளது.

இருப்பினும் சித்திரை புத்தாண்டு காலப்பகுதியில் மின்வெட்டை அமுல்படுத்தப்போவதில்லை என அமைச்சின் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த சில நாட்களில் தொழிற்சாலைகள் மற்றும் பிற ஆலைகளின் செயற்பாடுகள் குறையும் என்பதால் நாளாந்த மின் தேவை குறையும் என தாம் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

20 வீத நீர் மின் உற்பத்தி நிலையங்கள் மூலமாகவும் கிட்டத்தட்ட 40 வீதம் லக்விஜய நிலக்கரி மின் உற்பத்தி நிலையம் மூலமாகவும் மின்சாரம் பெற்றுக்கொள்ளப்படுகின்றது என அமைச்சின் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

## அமெரிக்க டொலரின் விற்பனை விலை அதிகரிப்பு

(கொழும்பு)

மத்திய வங்கி நேற்று திங்கட்கிழமை வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதத்தின் அடிப்படையில் அமெரிக்க டொலரின் விற்பனை விலை 203.73 ரூபாயாக அதிகரித்துள்ளது.

அமெரிக்க டொலரின் விற்பனை விலை, கடந்த வெள்ளிக்கிழமை நிலவரப்படி 203.59 ரூபாயாக பதிவாகியிருந்தது.

ரூபாய்க்கு நிகரான அமெரிக்க டொலரின் விற்பனை விலை வரலாற்றில் முதல் முறையாக 200 ரூபாயை கடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)


## பகிரங்க ஏல விற்பனை

எமது இல்லப் பண்ணையில் பராமரிக்கப்பட்டு வரும் தேவைக்கு மேலதிகமாக உள்ள நல்லின மாடுகளை 17.04.2021 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு எமது இல்ல ஜெயந்திநகர் பிரதான வளாகத்தில் ஏல விற்பனை நடைபெறும் என்பதை அறியத்தருவதோடு கால்நடை பெறுவோர் அன்று மாலை 6.00 மணிக்கு முன்பதாக முழுத் தொகையும் செலுத்தி பண்ணையில் இருந்து பெற்றுச் செல்ல வேண்டும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ச.மோகனபவன்**
**தலைவர்,**
**மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்,**
**ஜெயந்திநகர், கிளிநொச்சி.**

(C-1959)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யானைகள் அட்டகாசம் வாழை மரங்கள் சேதம்



(குருமபுரம்)
கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புதுக்காட்டு கிராமத்தில நாளாந்தம் கிராமத்திற்குள் நுழையும் காட்டு யானைகளால் தமது வாழ்வாதாரப் பயிர்கள் அழிவடைந்து வருவதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக உரிய அதிகாரிகளிடம் பலமுறை தெரிவித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என குறிப்பிடுகின்றனர்.

கடந்த சனிக் கிழமை இரவும் பல பயன்தரு வாழை மரங்களை யானைகள் சேதப்படுத்தியுள்ளன.

எனவே உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (5-4-316)

# வவுனியாவில் கடும் பனிமூட்டம் இயல்பு வாழ்க்கை பாதிப்பு



(நெளுக்குளம்)
வவுனியாவில் நிலவும் கடும் பனிமூட்டம் காரணமாக வாகன சாரதிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளதுடன், மக்களது இயல்பு வாழ்க்கையும் பாதிப்படைந்துள்ளது.

நேற்று அதிகாலையிலிருந்து வவுனியாவில் கடும் பனிப்பொழிவு ஏற்பட்டது. கடந்த சில நாட்களாக வவுனியாவில் மழை பெய்து வந்த நிலையில் தற்போது பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக ஏ-9 வீதியும் பனிமூட்டமாக காட்சியளித்தது.

இதனால் அதிகாலையில் தமது கடமைகளுக்குச் செல்லும் வாகனச் சாரதிகள், தனியார் வகுப்புகளுக்குச் செல்லும் மாணவர்கள், விவசாயிகள், தனியார் துறையினர் போன்ற பல்வேறு தரப்பினர் நேற்றைய தினம் போக்குவரத்து பாதிப்பினை எதிர் நோக்கினர். (5-4-299)

# 5 ஆயிரம் ரூபாய் வேலைத்திட்டம் ஆரம்பம்

சித்திரைப்புத்தாண்டினை வறிய நிலையில் உள்ள மக்கள் கொண்டாடும் வகையில் அரசாங்கத்தினால் 5000 ரூபாய் வழங்கும் வேலைத்திட்டம் நேற்று முதல் நாடளாவிய ரீதியில் சமுர்த்தி வங்கி ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தமிழ்,சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் எண்ணக்கருவுக்கு அமைவாக இந்த நிதியுதவி வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இக்கொடுப்பனவுகள் விசேட தேவையுடையோர், வருமானம் குறைந்தோர், பெண் தலைமைத்துவக் குடும்பம் என ஏழு பகுதியானவர்களுக்கு இந்த நிதியுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. (5)



கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் அமைந்துள்ள சிவன்சோலை வயல்பிள்ளையார் ஆலயத்தின் கருவறை அமைப்பதற்கான அடிக்கல் நேற்று முற்பகல் 10 மணியளவில் நாட்டி வைக்கப்பட்டது. குறித்த ஆலயத்திற்கான அடிக்கல்லினை பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எஸ்.பசுபதிப்பிள்ளை, ஆலய நிர்வாகத்தினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.
(படம்:- சப்தசங்கரி)



மன்னார் மாவட்டத்தில் தமிழ்-சிங்கள புத்தாண்டை முன்னிட்டு கொவிட்-19 பாதிப்பிற்கு உள்ளான குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான சமூகநல கொடுப்பனவு வழங்கும் ஆரம்ப நிகழ்வு நேற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.
(படம்:ஜோசப்நயன்)

# திட்டமிட்டபடி மே 18 இல் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு

## ஏற்பாட்டுக்குழு அறிவிப்பு

(முல்லைத்தீவு)
முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு எதிர்வரும் மே 18 ஆம் திகதி இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நினைவேந்தல் நிகழ்வை ஏற்பாடு செய்யும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, முள்ளிவாய்க்கால் தமிழினப்படுகொலை நினைவேந்தல் நிகழ்வு வழமை போன்று திட்டமிட்டபடி இவ்வாண்டும் மே 18 ஆம் திகதியன்று சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி முற்பகல் 10.30 மணிக்கு நினைவேந்தல் முற்றமான முள்ளிவாய்க்காலில் ஒழுங்கமைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்வதோடு தமிழர் தாயகமான வடக்கு-கிழக்கு மாகாணங்களிலும் ஏனைய இடங்களிலும் கறுப்புக் கொடியைப் பறக்கவிட்டும் மே 18 ஆம் திகதி மாலை 6 மணிக்கு ஆலயங்களிலும் கோவில்களிலும் மணி ஒலித்து அகவணக்கம் செலுத்தி, வீடுகளுக்கு முன் விளக்கேற்றி தமிழ்த் தேசிய துக்க நாளை கடைப்பிடிக்கும்படி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

மே 18 அன்று முள்ளிவாய்க்கால் கஞ்சியை பரிமாறுவதோடு, தமிழினப் படுகொலைக்கு நீதி வேண்டிய பயணத்தில் வேறுபாடுகளைக் களைந்து, 'ஈழத் தமிழ்த்தன்மையில்' ஒன்றிணைந்து முள்ளிவாய்க்கால் மையத்தில் மக்கள் இயக்கமாதலின் அவசியத்தையும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பினர் வேண்டி நிற்கின்றனர்.

தயவு செய்து தாயகத்தில் ஒருங்கிணைக்கப்படும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்காக உள்ளூரிலும் புலம்பெயர் தேசத்திலும் நிதி சேகரிப்பில் ஈடுபடுவதை தவிர்க்குமாறு வினயமாக வேண்டி நிற்கின்றனர். (5-4-33)

# மின் விளக்குகள் ஒளிரவில்லை பொது அமைப்புகள் குற்றச்சாட்டு

(பூநகரி)
பூநகரி பிரதேச சபை எல்லைக்குள் முக்கியமான இடங்களில் (சந்திகளில்) பொருத்தப்பட்ட மின் விளங்குகளில் 20 க்கு மேற்பட்டவை கடந்த ஒரு வருட காலமாக செயலிழந்து காணப்படுகின்றன.

இது தொடர்பாக பிரதேச உறுப்பினர்களிடம் முறையிட்டும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையே காணப்படுவதாக பிரதேச பொது அமைப்புக்கள் குற்றம் சாட்டுகின்றன.

முன்பு ஒரு தடவை முறையிட்டபோது ஆறு மாதத்தில் சீர் செய்வதாகக் கூறிய போதும் ஒரு வருடம் முடிந்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென கவலை தெரிவிக்கின்றனர். (5-4-84)



கிளிநொச்சியில் அமைந்துள்ள வடமாகாண மொழிப் பயிற்சி நிலையத்தில் நேற்று 2 ஆம் மொழி சிங்களக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்து 43 பேர் வெளியேறினர். அந்த வகையில் 2 ஆம் மொழி கற்கைக்கு வசதியாக குறித்த கற்கை வகுப்புக்கள் இடம்பெற்று [illegible] 150 மணித்தியால கற்றையை முடித்து 6 ஆவது அணி வெளியே[illegible] நேற்று இடம்பெற்றன.
(படம்:-சப்தசங்கரி , இரகுபதி)

# பூந்துணர் நறவம் XI நூலிற்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

(பூநகரி)
பூநகரி பிரதேச கலை கலாசார பேரவையால் வருடம்தோறும் வெளியிடப்படும் பூந்துணர் நூல் வெளியீடு செய்யப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக இவ்வருடம் வெளியிடப்படவுள்ள பூந்துணர் நறவம் XI நூலிற்கான கட்டுரை, கவிதை, சிறுகதை, நாடகம் ஆகிய ஆக்கங்கள் கோரப்படுகின்றன.

ஆக்கத் திறமையும் கலை நுட்பத்தையும் வெளிப்படுத்த விரும்புவோர் ஆக்கங்களை எதிர்வரும் 25.04.2021 இற்கு முன்னர் தலைவர் கலாசார பேரவை, பிரதேச செயலகம், பூநகரி என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு பூநகரி பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (5-4-84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

13.04.2021
பங்குனி 31, செவ்வாய்க்கிழமை
பிரதமை முற்பகல் 10.21 மணிவரை
அச்சுவினி பிற்பகல் 2.19 மணிவரை
சுபநேரம் 10.36-12.06 மணிவரை
இராகுகாலம் 3.06-4.36 மணிவரை
சந்திராஷ்டமம்:-உத்தரம், அத்தம்
அமிர்தசித்தம்

வளவன்


மேஷம்

சிலர் மீது காரணம் இல்லாமல் கோபம் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் சிறப்படைய வேண்டிய நாள்.


ரிஷபம்

சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச்சொல்லுக்கு ஆட்படநேரிடலாம், வெளிநாட்டுத் தொடர்புகள் கிட்டும்.


மிதுனம்

பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.


கடகம்

கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், தலைமைப் பொறுப்புக்கள் உங்களை நாடி வரலாம், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள்.


சிம்மம்

வியாபாரத்தில் விருத்தியுண்டு, சிக்கல்கள் விலகி சிறப்புகள் கூடும் நாள், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், தித்திக்கும் பயணங்கள் ஏற்படலாம்.


கன்னி

மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், மற்றவர்களை விமர்சிப்பதைத் தவிர்ப்பது நல்லது, விரயங்கள் மேலோங்கும் நாள்.


துலாம்

பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.


விருச்சிகம்

பாதியில் நின்ற பணி மீதியும் தொடர்வீர்கள், உடன்பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், தொழில் முன்னேற்றம் உண்டு.


தனுசு

மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.


மகரம்

உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளை கூறலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பயணங்கள் கைகூடும்.


கும்பம்

எதற்காகவும் பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது, பக்குவமாக பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், வருமானம் திருப்தி தரும்.


மீனம்

பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், வாக்கு மேன்மை உண்டு.

மனம் நினைப்பதை முகத்தில் காணும் கலை அறிவு

# மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்

## சர்வாதிகாரப் போக்கு தேவையில்லை என்கிறார் மாவை

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தின் போக்குகள் சர்வதேச நாடுகளின் உறவுநிலையில் இருந்து விலக்கிவைக்கும் நிலையை நோக்கி நகர்ந்து செல்கின்றது.

இதனை உணராமல் இந்த அரசாங்கம் செயற்படு கின்றது என இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

அரசாங்கத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,


இலங்கை அரசாங்கம் ஐ.நா. மனித உரிமை பேரவையின் தீர்மானங்களை உதறிதள்ளுகின்ற செயற்பாடுகளை செய்து வருகின்றது. இது இலங்கைக்கு நல்லதல்ல.

இலங்கையில் காணப்படுகின்ற இனப்பிரச்சினை தீர்விற்கோ காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாகவோ, காணிகள் விடுவிப்புத் தொடர்பிலோ யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை முன்னேற்றுவதற்கோ திட்டங்களை வகுக்க முடியாதவர்களாக பொருளாதார ரீதியிலான முன்னேற்றங்களை கூட செய்ய முடியாதவர்களாக இந்த ஆட்சியாளர்கள் இருக்கின்றார்கள்.

இதுஜனநாயகமற்ற நாடாக மாறுகின்ற நிலை காணப்படுகிறது. அதுமட்டுமன்றி சர்வாதிகார போக்கில் இராணுவ ஆட்சியை ஏற்படுத்தும் நிலையைக் கொண்டுவருகின்றது. ஆட்சிபீடம் ஏறியது முதல் கொண்டு நிர்வாகத்திற்குள் இராணுவ அதிகாரிகளை நியமித்து வருகிறார்கள். இது வடக்கு- கிழக்கு மட்டுமன்றி ஏனைய நிர்வாகத்திலும் மாவட்டங்களிலும் இடம்பெற்று வருகின்றது.

இது ஜனநாயகத்தை விரும்புகின்ற மக்களுக்கும் பாதிப்புகளை ஏற்படுத்தும் நிலை காணப்படுகின்றது.

அரசாங்கத்தின் தற்போதைய நிலைமைகளை எமது மக்கள் அவதானத்துடன் பார்க்க வேண்டும். எது நடந்தாலும் எமது மக்களை இலக்கு



வைக்கின்ற செயற்பாடுகளை அரசாங்கம் செய்துவருகிறது.

நாங்கள் இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளை கண்டிக்கின்றோம். அது மட்டுமன்றி ஐ.நா.மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப் படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்ட நாடுகளும் நடுநிலை வகித்த நாடுகளும் அந்த அரசின் நடவடிக்கைகள் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை இந்த வேளையில் கேட்டுக் கொள்கிறோம் என மாவை தெரிவித்தார். (நி-4)

# தவணை விடுமுறையை மாற்ற கல்வி அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

பாடசாலைகளுக்கு வழங்கப்படும் தவணை விடுமுறையில் மாற்றத்தை ஏற்படுத்த கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொவிட் பரவலுக்குப் பின்னர் பாடசாலைகள் மீண்டும் முழுமையாகச் செயற்பட ஆரம்பித்துள்ளன.

இந்நிலையில் எதிர்வரும் ஓகஸ்ட் மற்றும் டிசெம்பர் மாதங்களுக்காக பாடசாலை விடுமுறை காலப்பகுதியில் மாற்றத்தை ஏற்படுத்த கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

கொவிட் நிலைமையின் அழுத்தம் காரணமாக இந்த வருடம் ஓகஸ்ட் மாதம் இடம்பெறவிருந்த க.பொ.த.உயர்தர பரீட்சை மற்றும் க.பொ.த.சாதாரண தர பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளன. இதன் காரணமாக ஓகஸ்ட் மாதத்தில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு ஒக்டோபர் மாதம் பாடசாலை விடுமுறை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி-4)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532


# நன்றி நவிலல்...

அமரர்.திரு.வே.சிவஞானசோதி



எனது அன்புக் கணவர் அமரர்.திரு.
வே.சிவஞானசோதி
அவர்களை இழந்த தருணத்தில் எங்கள் குடும்பத்திற்கு நீங்கள் அளித்த அனுதாபங்கள், அன்பு மற்றும் ஆதரவுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்வதோடு இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் மலர்வளையங்கள் மற்றும் இரங்கல் செய்தி அனுப்பியவர்களுக்கும் நினைவுரைகள் ஆற்றியவர்களுக்கும் இரங்கல் கூட்டங்களை நடத்தியவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவருக்கும் நன்றி செலுத்த முடியாமைக்கு வருந்துகின்றோம்.

மனைவி
சகோதரர்கள் மற்றும் குடும்பத்தினர்.

(C-1316)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை இராணுவம் ஒரு மனிதாபிமான இராணுவமாம்

## யாழில் சவேந்திர சில்வா

(நல்லூர்)

**வெளிநாட்டு தொடர்புடைய தமிழ் மக்கள் சிலர் இராணுவத்திற்கு எதிராக பொய்ப்பிரசாரம் செய்கிறார்கள் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.**



யாழ்ப்பாணத்தில் பெண் தலைமை குடும்பம் ஒன்றுக்கு இராணுவத்தினர் அமைக்கப்பட்ட வீட்டினை கையளித்த பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்றையதினம் யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பெண் தலைமைத்துவத்தை கொண்ட ஒரு குடும்பத்திற்கு வீடு அமைத்துக் கொடுத்திருக்கின்றோம்.

அத்துடன் வீட்டுக்குத் தேவையான குளிர்சாதனப் பெட்டி உட்பட்ட அனைத்து பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அத்தோடு கல்விக்கான நிதிஉதவியும் வழங்கப் பட்டுள்ளது.

இலங்கை இராணுவமானது ஒரு மனிதாபிமான இராணுவம் என்பதை இலங்கையின் முப்படையினரும் தமிழ் மக்களுக்கு மனிதாபிமான செயற்பாட்டை முன்னெடுக்கிறார்கள் என யாழ்ப்பாணத்தில் வாழும் தமிழ் மக்கள் அனைவரும் நன்கு அறிவார்கள்.

ஏனைய தமிழ் மக்களுக்கும் அது நன்றாகப் புரியும்.

ஆனால் வெளிநாட்டில் இருப்பவர்கள் இங்கு குழப்பத்தை ஏற்படுத்தும் முகமாக இங்குள்ளவர்களுக்கு காசுகளை அனுப்பி இங்கு காசு வருகிறவர்கள் அல்லது வெளிநாட்டு தொடர்பு கொண்டுள்ளவர்கள் இங்கே இராணுவத்துக்கு எதிரான பொய்ப்பிரசாரம் முன்னெடுத்து வருவதுடன் இராணுவம் இங்கே தேவையற்றது எனவும் தெரிவித்து வருகின்றனர்.

ஆனால் தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள் இங்கு உள்ள இராணுவத்தினரால் தமிழர்களுக்கு நன்மை செய்யப்படுகின்றது.

அத்தோடு தமிழ் மக்களுக்குத்தேவையான அனைத்து வசதிகளையும் நாங்களும் முப்படையினரும் வழங்குவோம் என மேலும் தெரிவித்தார். (5-4-33)

## இரத்ததான முகாம்

(குப்பிழான்)

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டுக் கொக்குவில் பொற்பதி அறிவாலயம் நடத்தும் இரத்ததான முகாம் நாளை 14 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணி முதல் கொக்குவில் பொற்பதி வீதியில் அமைந்துள்ள பொற்பதி அறிவாலயத்தில் இடம் பெறவுள்ளது. மேற்படி இரத்த தான முகாமில் அனைத்து குருதிக் கொடையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-18)

## இனந்தெரியாதவர்களால் போக்குவரத்துக்கு இடையூறு

(அராலி)

அராலி மேற்கு அம்மன் கோவில் வீதியில் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோரால் போத்தல்களை உடைத்து போக்குவரத்திற்கு இடையூறு விளைவித்துள்ளனர்.

இது தொடர்பாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கையில்,

இவ்வாறான சம்பவங்கள் முன்னமும் நடைபெற்றது. இதுவரை அவர்கள் கண்டு பிடிக்கப்படவில்லை. கிராம உத்தியோகத்தருக்கும் இது தொடர்பில் தெரியப்படுத்தினோம்.

எனவே இவ்விடயத்தை கருத்திற்கொண்டு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தனர். (5-4-104)




### பத்மாசனி

தண்ணீரைப் போல் இருந்து விடுங்கள். ஏனெனில் அதற்கு ஒதுங்கிப் போகவும் தெரியும்... அடித்துக் கொண்டு போகவும் தெரியும்




### விஜயலட்சுமி

ஒதுக்கப்படுகிறாய் என்று தெரிந்த நொடியே ஒதுங்கப் பழகு, காரணம் கேட்காதே... உன்னைக் காயப்படுத்துவதற்காகவே காரணம் கண்டுபிடித்திருப்பார்கள்



### சந்திரசேகரன்

எங்கே விழுந்தோம் என்பதைவிட எங்கே கவனத்தைச் சிதறவிட்டோம் என்பதைக் கவனித்துப் பாருங்கள் விழவே மாட்டீர்கள்



### மல்லிகா

பக்குவம் என்பது காயப்படுத்தியவர்களை காயப்படுத்த வாய்ப்பிருந்தும் காயப்படுத்தாமல் கடந்து செல்வதே



### ஜெயந்தி

சிரித்துக்கொண்டே கடந்து விடு உன் கஷ்டங்களை மட்டுமல்ல உன்னைக் கலங்க வைத்தவர்களையும்



### விவேக்

பெண் பிள்ளை பிறந்திருச்சே என்று வருத்தப்படும் தகப்பனுக்குத் தெரிவதில்லை தன் கடைசிக் காலத்தில் தன்னைப் பார்த்துக்கொள்ள இறைவன் அனுப்பி வைத்த வரம் தான் பெண் என்று



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்வியடையும் எண்ணம் இருந்தால் மாகாணசபைத் தேர்தல் வேண்டாம்

## முருத்தெட்டுவே தேரர் எச்சரிக்கை

(கொழும்பு)

**தோல்வியடையும் எண்ணம் இருந்தால், மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டாம் என தான் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கு எச்சரிக்கை விடுப்பதாக முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.**

கொழும்பு நாராஹேன்பிட்டி அபயராம விகாரையில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

இடி விழுந்தது போல் திடீரென இந்த தேங்காய் எண்ணெய் பிரச்சினை உருவாகியது. பொருட்களின் விலைகள் ரொக்கெட் போல் உயர்ந்து வருகிறது. அமைச்சர்கள் எதனைக் கூறினாலும் பொருட்களைக் கொள்வனவு செய்ய கடைகளுக்கே செல்ல வேண்டும். கடைகளுக்கு சென்றால், அமைச்சர்கள் கூறும் விலையில் பொருட்கள் இல்லை. அங்கு விலைகளில் மாற்றம் காணப்படுகிறது.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் ஏற்பட்ட பாதிப்புகளை போக்கவே நாங்கள் புதிய அரசாங்கத்தை தெரிவு செய்தோம். அரசாங்கத்தின் குறைகளை நாங்கள் சுட்டிக்காட்டும் போது, எம்மில் சிலர் துதிபாடிக் கொண்டிருக்கின்றனர். பிக்குமார் துதிபாடினால், அரசாங்கம் தவறான வழிக்குச் செல்லும். தற்போது ஊழல், மோசடிகள் அதிகரித்து வருகின்றன.

அமைச்சர்கள் உதய கம்மன்பில், விமல் வீரவன்ச மற்றும் அபயராம விகாரை உள்ளிட்ட அணிகள் இல்லை என்றால், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உருவாகி இருக்காது.



நாங்கள் ஒன்றரை ஆண்டுகளாக காத்திருந்தோம். முடிந்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்துங்கள். தேர்தலை நடத்தினால், அரசாங்கம் எந்த இடத்தில் இருக்கும் என்பது தெளிவானது. யார் என்ன கூறினாலும் புத்தாண்டுக்கு பின்னர் நாங்கள் அணிதிரள்வோம் என முருத்தெட்டுவே ஆனந்த தேரர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# நாட்டின் ஒற்றையாட்சி முறைமைக்கு பாதிப்பை ஏற்படுத்த இடமளிக்க முடியாது


## கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச

(கொழும்பு)

ஜெனிவா விவகாரம் அரசாங்கத்திற்கு பெரும் சவாலாக காணப்பட்டது. சர்வதேசத்தில் மண்டியிடாமல் இராணுவத்தினரை அரசாங்கம் பாதுகாத்துள்ளது. ஜெனிவா விவகாரத்தை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் ஏற்படும் சவால்களை வெற்றிகொள்ள அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஆட்சியதிகாரத்தை கைப்பற்றி குறுகிய காலத்தில் அரசாங்கம் பல சவால்களை எதிர்கொண்டுள்ளது. இஸ்லாமிய அடிப்படைவாதத்தினால் ஏற்பட்ட சவால்களை அரசாங்கம் சிறந்த



முறையில் வெற்றி கொண்டுள்ளது. நல்லாட்சி அரசாங்கத்தில் இஸ்லாமிய அடிப்படைவாதம் அரச ஆதரவுடன் எழுச்சி பெற்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற உறுப்புரிமை பறிபோனதை அரசாங்கத்தின் சூழ்ச்சி என எதிர்த்தரப்பினர் குறிப்பிட்டுக் கொண்டு பாராளுமன்றில் முறையற்ற வகையில் செயற்பட்டார்கள். வெற்றிடமான பாராளுமன்ற உறுப்பினராக ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டதும் எதிர்க்கட்சியினர் அமைதியடைந்து விட்டார்கள்.

அரசாங்கத்தை அவமதித்த குற்றச்சாட்டில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க சிறை செல்லவில்லை. நீதிமன்ற அவமதிப்பு குற்றத்துக்காகவே அவர் சிறை சென்றுள்ளார் என்பதை எதிர்த் தரப்பினர் விளங்கிக் கொள்ள வேண்டும். ரஞ்சன் ராமநாயக்கவின் விவகாரத்துக்கு அரசியல் ரீதியில் இனியொரு போதும் தீர்வு காண முடியாது.

நாட்டின் ஒற்றையாட்சி முறைமைக்கு பாதிப்பை ஏற்படுத்த ஒருபோதும் இடமளிக்க முடியாது. பலவீனப்படுத்தப்பட்ட தேசிய பாதுகாப்பு தற்போது பலப்படுத்தப்பட்டுள்ளது. ஒற்றையாட்சி முறைமையின் அம்சங்களை பாதுகாக்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என விமல் வீரவன்ச தெரிவித்தார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மனித மனம்!

ஒரு ஊர். அது ஒரு சின்னக் கிராமம். அங்கே ஒரு பெண் புத்திசுவாதீனமாக இருந்தாள். கிறுக்குப் பிடித்த பெண். அவள் பல காலங்களாக அந்தக் கிராமத்திலேயே இருக்கின்றாள். ஒரு நாள் திடீர் என்று அந்தக் கிராமத்து மக்களையெல்லாம் கண்டபடி திட்டிவிட்டு புறப்பட்டாள்.

ஏன் இப்படித் திடீர் என்று இந்த ஊரை விட்டுவிட்டுப் புறப்பட்டாய் என்று கேட்டார்கள்.

இதற்கு அவள் சொன்னாள்... இவ்வளவு காலமும் நீங்கள் என்னை சித்திரவதை செய்தீர்கள். கொடுமைப்படுத்தினீர்கள். நான் இந்த ஊரை விட்டுவிட்டுப் போனால் தான் என்னுடைய அருமை உங்களுக்குப் புரியும்.

இனிமேல் தான் உங்களுக்குப் புத்தி வரப் போகின்றது. பாடம் கற்றுக் கொள்ளப் போகின்றீர்கள். பார்த்துக் கொண்டே இருங்கள் என்றாள்.

அவள் இப்படிப் பயமுறுத்தியது அந்த ஊர் மக்களுக்கு ஆச்சரியமாக இருந்தது.நீ வந்து எங்களுக்குப் பாடம் கற்றுக் கொடுக்கப் போகின்றாயா? என்ன பாடம் கற்றுக் கொடுக்கப் போகின்றாய்? எப்படிக் கற்றுக் கொடுக்கப் போகின்றாய்? என்று கேட்டார்கள்.

நான் என்னுடைய சேவலை என்னுடன் எடுத்துக் கொண்டு போய்விடப் போகின்றேன். இவ்வளவு நாளும் இந்த ஊரிலே என்னுடைய இந்த சேவல் கூவித்தானே ஒவ்வொரு நாளும் உங்களுக்குப் பொழுது விடிந்தது? இனிமேல் உங்களுக்கு பொழுது விடியப் போவதில்லை.

ஏன் என்றால்.. அதற்குக் காரணமான சேவலை நான் என்னுடன் தூக்கிக் கொண்டு போகப் போகின்றேன். இனிமேல் அடுத்த கிராமத்து மக்களுக்குத் தான்... என்னுடைய சேவல் கூவி பொழுது விடியப் போகிறது. உங்களுக்கு சூரியனே இனிமேல் உதிக்கப் போவதில்லை. இருட்டிலேயே இருங்கள் என்று சொல்லிவிட்டு புறப்பட்டுப் போய்விட்டாள்.

அவள் தன்னுடைய சேவலோடு அடுத்த ஊருக்குப் போய்ச் சேர்ந்தாள். அவள் கொண்டு போன சேவல் கூவியது... பொழுது விடிந்தது.. சூரியன் உதயமாகியது.அந்தப் பெண் இப்பொழுது மனதுக்குள்ளே நினைத்துக் கொண்டாள்... "அந்த முட்டாள் மக்கள் இப்பொழுது நன்றாக இருட்டிலே கிடந்து துன்பப்படட்டும், கண்ணீர் விட்டுக் கதறட்டும். இனிமேல் இந்த ஊர் மக்களுக்காகத்தான் என்னுடைய சேவல்... என்னுடைய பழைய கிராம மக்களுக்கு இனிமேல் இருட்டுத்தான்...!"இப்படி தனக்குள்ளே சொல்லிக் கொண்டாள்.

இவள் இப்படி நினைத்துக் கொண்டது சரி தான். அங்கே சேவல் கூவியது உண்மை. பொழுது விடிந்ததும் உண்மை. சூரியன் உதித்ததும் உண்மை. இந்த ஊருக்கு வந்ததும் இங்கேயும் அப்படியே நடந்தது. இதுவும் உண்மைதான்.

அவள் மனது என்ன செய்தது என்றால்... சேவல் கூவுவதற்கும் சூரியன் உதிப்பதற்கும் முடிச்சுப் போட்டுவிட்டது.

ஆனால் எந்தச் சேவலுக்கும் அப்படிப்பட்ட பிரம்மை கிடையாது. சேவல் நினைப்பதில்லை... நாம் கூவித் தான் சூரியன் உதிக்கிறது என்று.

அது உதிக்கும்போது தான் இது கூவுது.. இது சேவலுக்குத் தெரியும். சேவலை வைத்து இருக்கிறவர்களுக்குத் தான் அப்படிப்பட்ட எண்ணம் எல்லாம் உண்டாகின்றது. கதிரவன் உதிக்கும் போது தான் சேவல் கூவுகிறது. இது சேவலுக்குத் தெரியும்.

ஆனால் அதன் எஜமானருக்குத்தான் தெரியாது...! மனித மனத்தை வெளிப்படுத்துகின்ற–அடையாளம் காட்டுகின்ற இந்த கதையை ஓஷோ சொல்வது வழக்கம். எதிர்காலம் என்பது தானாக வரும்.அது இப்பொழுதே வந்து விட்டுத் தான் இருக்கு. அதைத் தடுத்து நிறுத்தவும் நம்மால் முடியாது.

நாளைக்கு என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கின்ற அந்த நாள் இன்றைக்கென்று மாறத்தான் போகின்றது.அதை நம்மால் தடுக்க முடியாது. மனிதன் தன்னுடைய பணியைச் சிறப்பாகச் செய்து முடிக்க வேண்டும் அவ்வளவு தான்.

அந்தச் செயலுக்கு அப்பாலோ பின்னாலோ எதுவும் கிடையாது. நாளையைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதே இல்லை...அது வந்தே தீரும். மனித மனம் என்ன நினைக்கின்றது என்றால் எல்லாமே நம்ம ஆசைப் படியும் எங்கள் எதிர்பார்ப்பின்படியும் தான் நடக்கிறதாக நாம் நம்புகின்றோம். அந்தப் பெண் நினைத்தது மாதிரி மது மயக்கத்திலே இருக்கின்றவர்கள் செயலுக்கும் இதற்கும் அதிக வித்தியாசமில்லை.

ஒரு நாள் இரவு நேரம் மதுக்கடையிலிருந்து ஒருத்தன் வெளியே தள்ளாடியபடி வந்தான். நேராக ஒரு சுவரிலே போய் முட்டிக் கொண்டு நின்று விட்டான். விடிகின்ற வரைக்கும் அப்படியே முட்டிக்கொண்டு நின்று கொண்டிருக்கின்றான்.

அந்த வழியாக வந்தவர் சொன்னார்... பார்த்தியா மது அருந்தினால் உன்னாலே சொந்தக் காலிலே நிற்க முடியவில்லை. கீழே விழுந்துவிடுவாய். நீ கீழே விழாமல் தாங்கிக் கொள்ள ஒரு சுவர் தேவைப்படுகின்றது பார்த்தியா? என்று புத்தி சொன்னார்.

அதற்கு அவன் சொன்னான்...''விபரம் தெரியாமல் பேசாதீர்கள் சேர்... ராத்திரி பூராகவும் நான் தான் இந்தச் சுவர் கீழே விழாமல் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கின்றேன். விட்டுவிட்டால் இப்பொழுது என்மேலேயே விழுந்து விடும்'' என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பிலவ" வருஷ வருஷப்பிறப்புக் கருமங்கள்

## வாக்கிய பஞ்சாங்கம்

| | | | |
|---|---|---|---|
| | சூரி.சந் புத.சுக் | செவ் ராகு | |
| குரு | பிலவ வருஷ ஜாதகம் | | |
| லக் சனி | | | |
| | கேது | | |

சார்வரி வருஷம் பங்குனி மாதம் 31 ஆம் திகதி (14.4.2021) செவ்வாய்க் கிழமை பின்னிரவு 1.39 மணிக்கு பூர்வபக்க துதியை திதியில் பரணி நட்சத்திரத்தின் இரண்டாம் மாதத்தில் பீரீதி நாம யோகத்தில், கௌலவம் கரணத்தில் மகர லக்கிணத்தில், இடப நவாம்சத்தில், சனி கால ஓரையில், சந்திரன் சூக்கும ஓரையில், தாமத குண வேளை யில் நட்சத்திர பட்சியாகிய வல்லூறு உண்டித்தொழிலும் சூக்கும பட்சி உண்டித் தொழிலும் செய்யும் காலத்தில் இப் புதிய "பிலவ" என்னும் புதிய வருஷம் பிறக்கின்றது. அன்று முன்னி ரவு 9.39மணி முதல் அன்று பின்னி ரவு 5.39 மணி வரை விஷ° புண்ணி ய காலமாகும்.

## திருக்கணித பஞ்சாங்கம்

| | | | |
|---|---|---|---|
| புதன் | சூரி.சுக் சந். யுரே | ராகு | செவ் |
| நெப் குரு | புது வருஷ கிரக நிலை | | |
| லக் சனி | | | |
| | கேது | | |

சார்வரி வருஷம் பங்குனி மாதம் 31 ஆம் நாள் (14.04.2021) செவ்வாய் கிழமை பின்னிரவு 2.31 மணிக்கு "பிலவ" என்னும் பெயருடைய தமிழ்ப் புதுவருடம் பிறக்கின்றது.

இது 60 வருட சுற்றுவட்டத்தில் 35 ஆவது வருஷமாகும். அந்நேரம் நட்சத்திரம் பரணி 2 ஆம் பாதம் திதி பூர்வபட்ச துவிதியை அமிர்த சித்த யோகம் அன்று இரவு 10.30 மணிமுதல் மறு நாள் அதிகாலை 6.33 மணிவரை மேட சங்கிரமண புண்ணிய காலமாகும். வருஷம் பிறக்கும் போது உதய லக்கினம் மகரம் ஆகும்.

## கருமங்கள்

விஷ° புண்ணிய காலத்தில் யாவரும் விதிப்படி சங்கற்பித்து, மருத்துநீர் தேய்த்து சிரசில் விளா இலையும், காலில் கடப்பம் இலையும் வைத்து ஸ்நானஞ் செய்து நீலம், சிவப்பு நிறமுள்ள பட்டாடையாயினும், நீலம் சிவப்பு கரையமைந்த புதிய பட்டாடையாயினும் தரித்து நீலம், பவளம் இழைத்த ஆபரணம் அணிந்து சுகந்த சந்தனம் பூசி, நறுமலர் சூடி விக்கினேசுவரர் முதலிய குலதெய்வ வழிபாடு செய்து இயன்ற தானதருமங்களையாற்றி குரு பெற்றோர் முதலிய பெரியோரை வணங்கி அவரின் ஆசி பெற்று உற்றார் நண்பர்களுடன் அளவளாவி அறு சுவை உணவுடன் பொரிக்கறி, கறுப்பு சேர்ந்தருந்தி, தாம்பூலம் தரித்து கண்ணாடியில் முக தரிசனம் செய்து புதிய வருஷ பலன்களை வாசித்தும், கேட்டும் நன் குணர்ந்து தத்தம் சமய நூல்களை பாராயணம் செய்து மங்களகரமாகச் சயனஞ்செய்க.

மறுநாளாகிய பிலவ வருஷம் சித்திரை மாதம் 01 ஆம் திகதி புதன்கிழமை வைகறையில் துயிலெழுந்து மனத் தூய்மையுடன் வழிபடும் கடவுளைத் தியானித்து தான் முன் செய்தவைகளையும் மேற் செயற்பாலானவாகிய அறம் பொருள் இன்பங்களையும் சிந்தித்து கண்ணாடி தீபம் நிறைகுடம் தன் வலக்கை தாய், தந்தை ஆசிரியரின் பாதம் தேவதைகளின் திருவுருவம் திருமுறைப் புத்தகம் தாமரை முதலிய பூக்கள் பழவகை, மஞ்சள், குங்குமம், சந்தனம், வெற்றிலை, பாக்கு முதலிய மங்கலப் பொருட் களைத் தரிசித்து நித்திய கர்மானு ஷ்டானங்களை முடித்து, தங்கள் வீடு களிலே சூரியனுக்குப் பொங்கல் செய்து, முன்போல போசண பூஷண தரிசா னாதிகள் இயற்றி மங்களகரமாக வாழக்கடவர்.

### மருத்துநீர் தயாரித்தல்

தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ, துளசி, விஷ்ணுகிராந்தி, சீதேவியார் செங்கழுநீர் வில்வம், அறுகு, பீக்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திற்பிலி, சுக்கு இவைகளை சுத்த ஜலத்திலிட்டு காய்ச்சி கொள்க.

### கைவிசேஷம் - வாக்கிய பஞ்சாங்கம்

14.04.2021 - புதன் முற்பகல் 9.09 மணிமுதல் 9.52 மணிவரை
14.04.2021 - புதன் பிற்பகல் 2.22 மணிவரை 4.11 மணிவரை
16.04.2021 - வெள்ளி பின் இரவு 4.16 மணிமுதல் 5.07 மணிவரை
17.04.2021 - சனி காலை 7.49 மணிமுதல் 9.00 மணிவரை
17.04.2021 - சனி மாலை 3.04 மணிமுதல் 3.59 மணிவரை

### கைவிசேஷம் - திருக்கணித பஞ்சாங்கம்

14.04.2021 புதன் காலை 6.15 மணிமுதல் 7.30மணிவரை
14.04.2021 புதன் மாலை 6.15 மணிமுதல் 7.00 மணிவரை
16.04.2021 வெள்ளி பின்னிரவு 5.15 மணிமுதல் 6.00 மணிவரை
17.04.2021 சனி பகல் 10.30 மணிமுதல் 11.40 மணி

### சங்கிரம தோஷ நட்சத்திரங்கள்

அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ம் பாதம், பூரம், உத்தரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள், பூராடம்

இவற்றில் பிறந்தோர் தவறாது மருந்துநீர் தேய்த்து ஸ்நானஞ் செய்து இயன்ற தான தருமங்களைச் செய்து சங்கிரம தோஷத்தை நிவர்த்தி செய்து கொள்ள முடியும்.

# இலங்கையில் மீண்டும் குள்ள மனிதர்களின் நடமாட்டம்

(பதுளை)

நாட்டின் பல பகுதிகளில் குள்ள மனிதர்கள் பற்றி பல தகவல்கள் வெளியாகி மக்கள் மத்தியில் பேசப்பட்டு வந்தன.

அந்தவகையில், பதுளை - இரண்டாம் கட்டை-நேத்ராகம பிரதேசவாசிகள் இந்த குள்ள மனிதர்களின் நடமாட்டத்தை அவதானித்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

மாத்தறை-தொட்டமுன மீனவ கிராமத்தில் இதற்கு முன்னர் குள்ள மனிதர்கள் தொடர்பாக தகவல்கள் பதிவாகியிருந்தன.

அவ்வாறே குளியாப்பிட்டி -எஹதலவ மற்றும் மூனமல்தெனிய போன்ற பிரதேசங்களிலும், அநுராதபுரம்-மஹாவிலச்சி, எந்தகல்ல பிரதேசங்களிலும், அம்பாறை-தமன-தொட்டம பிரதேசங்களிலும் இதற்கு முன் குள்ள மனிதர்கள் தொடர்பில் தகவல்கள் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# டில்லி செல்லும் கோட்டா

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த மாத இறுதியில் டில்லிக்கு செல்ல திட்டமிட்டுள்ளதாக இந்திய ஊடகமொன்று தெரிவித்துள்ளது. (நி-4)

# இன்றும் நாளையும் 30 ரயில் சேவைகள் ரத்து

(கொழும்பு)

இன்றும் நாளையும் அலுவலக ரயில் சேவைகள் உட்பட கிட்டத்தட்ட 30 பயணிகள் ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்படும் என ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

எனினும் புத்தாண்டு விடுமுறையை ஒட்டி சொந்த ஊர்களுக்குத் செல்லும் மக்களுக்கான ஒழுங்கமைக்கப்பட்ட விசேட ரயில் சேவைகள் திட்டமிட்டபடி இடம்பெறும் எனவும் ரயில்வே திணைக்களம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# தொடரூந்து தொடர்பான விபரங்களுக்கு 1971

(கொழும்பு)

தொடரூந்துகள் தொடர்பான பயணிகளின் முறைப்பாடுகள் மற்றும் தொடரூந்து தொடர்பான விபரங்களுக்கு 1971 என்ற அவசர தொலைபேசி இலக்கம் தொடரூந்து திணைக் களத்தினால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது. (நி-4)

# பொலிஸாரிடம் சிக்கிய சீன மதுபானப் போத்தல்கள்



(கொழும்பு)

கொள்ளுப்பிட்டி [illegible] வீதியில் சீன உற்பத்தி பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையமொன்றிலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட ஒருதொகை சீன மதுபான போத்தல்கள் கொள்ளுப்பிட்டி பொலிஸாரினால் கைப்பற்றப் பட்டுள்ளன.

நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலைய குற்றப்புலனாய்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது அனுமதிப்பத்திரமின்றி இறக்குமதி செய்யப்பட்ட 656 சீன மதுபான போத்தல்கள் இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பாக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தோனேசியாவை கைவிட்ட இயற்கை அன்னை புயலில் சிக்கி தவிக்கும் இந்தோனேசிய மக்கள்

- 177 பேர் பலி
- 45 பேர் காணவில்லை

(ஜகார்த்தா)

**இந்தோனேசியாவில் செரோஜா புயலில் சிக்கி 177 பேர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.**





இந்தோனேசியாவில் சில கடல் பகுதிகளில் புயலின் பாதிப்புகளை முன்னிட்டு கடல் அலைகள் 6 மீற்றர் உயரத்திற்கு எழும்பியுள்ளன.

புயலைத் தொடர்ந்து கன மழை பெய்ததுடன் பலத்த காற்றும் வீசியது. புயல் பாதித்த பகுதிகளில் வசிக்கும் மக்களை மீட்டு வாடகை வீடுகளில் தங்க வைத்துள்ளனர். கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப் புயலால் மொத்தம் 177 பேர் உயிரிழந்துள்ளனர். 45 பேரைக் காணவில்லை. அவர்களைத் தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. (நி-4-8)

## உயர்நீதிமன்ற ஊழியர்களுக்கு கொரோனாத் தொற்றுறுதி

(டில்லி)

இந்திய உயர்நீதிமன்றிலுள்ள ஊழியர்களில் 50 சதவீதமானோருக்கு கொவிட்-19 தொற்றுறுதியாகியுள்ளது.

இதன்காரணமாக வழக்கு விசாரணைகள் தற்போது தொலை காணொளி தொழில்நுட்பத்தின் ஊடாக இடம்பெறுவதாக அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (நி-4-8)

**உலகளவில் கொரோனா**

**உயிரிழப்பு :-2939 080**

**தொற்று :-135 995 243**

**(நேற்றைய நிலவரம்)**

## படகு கவிழ்ந்ததில் நான்கு பேர் பலி




(ரபட்)

மொராக்கோவின் கடற்கரையை அடுத்துள்ள தீவுக்கூட்டமான கேனரிக்கு வெளியே நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை குடியேறிய படகொன்றில் நால்வர் உயிரிழந்த நிலையில் காணப்பட்டதாக ஸ்பெய்னின் செஞ்சிலுவை சங்கம் தெரிவித்துள்ளது.

மீட்புப் படையினர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மீட்பு நடவடிக்கைகளை முன்னெடுத்ததுடன், மீட்கப்பட்டவர்களைப் பாதுகாப்பாக மூன்று ஹெலிகொப்டர்கள் மூலம் கொண்டு சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

படகில் இருந்த 23 பேரில் 16 பேர் "மோசமான நிலையில்" இருப்பதாகவும் சிறந்த நிலையில் உள்ள மூன்று பேர் டெனெர்ஃபைக்கு விமானத்தில் கொண்டு செல்லப்பட்டதாகவும் செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

படகில் இருந்தவர்களில் நான்கு பேரே உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4-8)

## பிரேஸிலை பின்தள்ளிய இந்தியா




(டில்லி)

இந்தியாவில் நேற்று முன்தினம் மட்டும் ஒரு இலட்சத்து 68 ஆயிரத்து 912 புதிய கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அந்நாட்டு சுகாதார அமைச்சகம் நேற்றுக் காலை தெரிவித்துள்ளது.

இந்த எண்ணிக்கையின் மூலமாக கொரோனா வைரஸ் அதிகளவாகப் பதிவான நாடுகளின் பட்டியலில் பிரேஸிலை பின்னுக்குத் தள்ளி இந்தியா இரண்டாம் இடத்துக்கு வந்துள்ளது. (நி-4-8)

## ரெம்டெசிவிர் தடுப்பூசி ஏற்றுமதிக்கு இந்தியா தடை விதித்துள்ளது




(டில்லி)

ரெம்டெசிவிர் எனப்படும் நோய் எதிர்ப்பு தடுப்பூசிகளை ஏற்றுமதி செய்வதற்கு இந்தியா உடனடி தடைவிதித்துள்ளது.

இந்தியாவில் கொவிட்-19 தொற்றுறுதியாகின்றவர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளது.

அங்கு நேற்று முன்தினம் [illegible] தில் மாத்திரம் ஒரு இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமானோருக்கு கொவிட்-19 தொற்றுறுதியானது.

இந்த நிலையில் நோய் எதிர்ப்பு தடுப்பூசியான ரெம்டெசிவிர் தடுப்பூசியை ஏற்றுமதி செய்வதற்கு இந்தியா தடை விதித்துள்ளது.

இந்தியாவில் கொவிட்-19 பரவல் அதிகரித்தமையை அடுத்து இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

அத்துடன் இந்த விடயம் தொடர்பில் ரெம்டெசிவிர் தயாரிப்பு நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதோடு அவர்களிடம் உள்ள இருப்புகள் [illegible] படுகின்றது. (நி-4-8)

## பயிற்சி விண்வெளி வீராங்கனையாக முதலாவது அரபு பெண்



(டுபாய்)

ஐக்கிய அரபு இராச்சியத்தில் முதல் அரபு பெண் விண்வெளி வீராங்கனை உட்பட 2 புதிய அமீரக விண்வெளி வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

இதனை, ஐக்கிய அரபு இராச்சிய துணை ஜனாதிபதியும் பிரதமரும் டுபாய் ஆட்சியாளருமான ஷேக் முகம்மது பின் ராஷித் அல் மக்தூம் டுவிட்டர் மூலம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் 2 புதிய விண்வெளி வீரர்களாக நோரா அல் மத்ரூசி (வயது-27) என்ற பெண்ணும் மற்றும் முகம்மது அல் முல்லா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட இருவருக்குமான பயிற்சி, அமெரிக்காவில் உள்ள நாசா விண்வெளி திட்டத்துடன் இணைந்து விரைவில் மேற்கொள்ளப்படும். (நி-4-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டெழுந்த யாழ்ப்பாண பொதுசன நூலகம்

## 12 நூல்களிலிருந்து அதன் வரலாற்றுத் தேடல்



திருமதி.சுகந்தினி சதாசிவமூர்த்தி பிரதம நூலகர், யாழ்ப்பாணம் பொது நூலகம்
கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

### அமெரிக்கத் தகவல் நூலகமும், யாழ்ப்பாணப் பொதுசன நூலகமும் ஒன்றுகலந்தமை

சிலவருடகாலமாக யாழ்ப்பாணத்து நான்காம் குறுக்குத் தெருவில் அமெரிக்க அரசின் ஆதரவில் ஒரு தகவல் நூலகம் மிக நல்ல முறையில் நடைபெற்றுவந்தது. நூலகத்துக்கான நூல்கள், சஞ்சிகைகள் முதலியன பெருந்தொகையாக அமெரிக்காவிலிருந்து வந்திருந்தன. அதுமட்டுமல்ல அந்நிலையத்தில் அலங்காரமாக அணி அணியாக இருந்த தளபாடங்கள். உபகரணங்கள், படங்கள், படச்சுருள்கள், திரைப்படக் கருவிகள் யாவும் நல்ல முறையில் பயன் அளித்து வந்துள்ளன. முதியவர், இளைஞர், யுவதிகள் முதலானோரின் அறிவுப் பசியைத் தீர்த்த நூலகம். குழந்தைககளுக்கான பகுதி பெரிய எழுத்துப் புத்தகங்கள், படங்கள் கொண்டு ஒரு பக்கத்தில் இயங்கி வந்தது. விலையுயர்ந்த நூல்கள் பல அங்கத்தவர்கள் எடுத்துச் செல்லவும், அங்கிருந்தே வாசிக்கவும் வசதியாக அடுக்கப் பெற்றிருந்தன. எங்கே எந்த நாட்டிலே என்ன புத்தகம் வெளிவந்திருக்கிறதோ, அதை அறிந்து கொள்வதற்கு வாய்ப்பாக அந்தந்த நூல்கள் பற்றிய விபரம் அமெரிக்க நூலகத்தில் துலாம்பரமாக இருந்தது. அமெரிக்க நூலகத்தார் வாரந்தோறும் அறிவுத்துறை சார்ந்த திரைப்படக் காட்சியும் ஒழுங்காக காட்டி வந்தனர்.

இத்தகைய புகழ் மணத்த புத்தக நிலையத்தை அமெரிக்க அரசு, 1967இல், இலங்கையரிடமே கையளிக்க ஆயத்தப்படுத்தியபோது, இதனைக் கண்டி நகரத்துக்குத் தட்டிக் கொண்டு போவதற்குச் சிலர் இரகசியமாகப் பெருமுயற்சி செய்தனர். இந்நிலையில் இதனை யாழ்ப்பாணத்திலேயே பயன்பெற வைத்துக் கொள்ளுதல் வேண்டும் என்று பாக்கியநாதன் துடியாய்த் துடித்தபோது, விசேட ஆணையாளர் மாணிக்கவாசகர் வெகுவாக முயன்று யாழ்ப்பாணத்துப் பொதுசன நூல்நிலையத்தோடு ஒன்றிணைக்க ஒழுங்கு செய்து நிறைவேற்றினார்.

யாழ்ப்பாண பொது சன நூலகத்தோடு அமெரிக்க நூலகம் கலந்ததும் பின்னையது மேல் மாடியின் வடக்குப் பக்கத்துப் பெரிய மண்டபத்தில் இடம் பெற்றது. இதனைத் திறந்து வைக்கும் முகமாக அமெரிக்கத் ஸ்தானிகர் தாங்கிய அன்ட்றுவி கொறி யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார். அவர் நூலகத்தைத் திறந்து வைத்து அருமையாக, அமைவாக, அன்போடு அளவாகப் பேசினார்.

"உலக மக்களின் நல்லுறவுக்குப் புத்தகங்களே அடிப்படை அத்தியாவசியம். அமெரிக்க யாழ்ப்பாண உறவுக்கும் நூலறிவே காரணம். நூல் நிலையங்கள் வெளியுலகுக்குப் பிரவாகித்துச் செல்லும் அறிவூற்றுகளாகும். இந்த நூல் நிலையம் அறிவுக் களஞ்சியமாய் உள்ளது. இதனோடு இணைவதற்கு எங்கள் அமெரிக்கத் தகவல் நூலகத்தையும் உங்களுக்குக் கையளிப்பதில் அமெரிக்க மக்கள்சார்பில் அடியேன் உள்ளம் நிறைந்த பெருமகிழ்ச்சியடைகிறேன்." என்று ஆரம்பித்து உரை ஆற்றிய அவர் கடைசியில்" இன்று அமெரிக்க மக்கள் சார்பில் இந் நூலகத்தை உங்களுக்கு அன்பளிப்பு செய்கிறேன். இந்நூல்களும் பிற சாதனங்களும் பல்லாண்டுகளாக சேகரிக்கப் பெற்ற செல்வங்கள். இவை இன்று தொடக்கம் உங்கள் பொறுப்பில் இருக்கும். இவ்வைபவத்தில், எங்கள் நாட்டில் நூலகவியல் பயின்று பட்டம் பெற்றுப் பயிற்சி பெற்றுவந்த வே.இ.பாக்கியநாதனை பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகிறேன். இவர் அங்கே நல்ல முறையில் பயின்று வந்தவற்றை இங்கே நடைமுறைப்படுத்துவதற்கு நீங்கள் பூரண ஒத்துழைப்பு நல்குதல் வேண்டும். இந்த நூலகம் 150 ஆண்டுகால இலங்கை அமெரிக்க நல்லுறவை மேலும் நீடித்து நிலை பெறுவதற்கான முறையில் உங்கள் மத்தியில் பயன்தருதல் வேண்டும்." என்று கூறி முடித்தார்.

### சிறுவர் நூலகப் பிரிவு

"யாழ்ப்பாண நூல் நிலைய ஆவணத் தொகுப்பு" நூலில் சிறுவர் நூலகப் பிரிவு பற்றி பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் அற்லான்ரா பல்கலைக்கழகத்தில் நூலகப்படிப்பில் முதுமானிப்பட்டமும், சாந்தியாகோ நூலகத்தில் சிறுவர் நூலகப் பயிற்சியும் பெற்று வந்த பாக்கியநாதன் யாழ்ப்பாண பொதுசன நூலகத்தோடு அமெரிக்கத் தகவல் நூலகத்தை ஒன்றிணைத்த முயற்சியோடு நிற்கவில்லை.யாழ்ப்பாணத்தில், முன்னோடியாக முதற்தரமான சிறுவர் நூலகம் ஒன்றைச் சிறந்த முறையில் அமைத்தல் வேண்டும் என்று சிந்தித்து, இரவு பகலாக முயற்சி செய்தார்.

நூலக வளர்ச்சி சம்பந்தமாகவும், அதற்கு வேண்டிய நூல்களைப்பற்றி ஆலோசனை கூறுவதற்காகவும், அந் நாளில் மாநகரசபைத் தலைவர் மேயர் அல்பிரெட் த.துரையப்பாவின் தலைமையில் ஒரு நிர்வாக சபை இயங்கி வந்தது. அதில் மாநகர சபை அங்கத்தவர்களோடு நகரிலும் அயலிலும் வாழ்ந்த அறிவாளிகள் சிலரும் இடம் பெற்றிருந்தனர்.

அமெரிக்க தகவல் நூலகத்தார் தந்துதவிய வசதிகள் வாய்ப்புகளோடு இன்னும் வேண்டியனவற்றைத் தேடிச் சிறுவர் நூல் நிலையத்தை உடனடியாக அமைப்பதற்கான ஒழுங்கு வகைகளை ஆலோசித்து சிறுவர் நூலகத்துக்கான பூர்வாங்க ஏற்பாடுகளுக்காக அமெரிக்க ஸ்தானிகர் ரூபாய் பதினோராயிரம் வழங்கி இருந்தார். அதற்காக வேண்டிய தளபாட வரிசைகளுள் சின்னஞ் சிறிய கதிரைகள் முதலியவற்றையும் அமெரிக்க தகவல் நூலகம் தந்துதவியிருந்தது.

அமெரிக்காவில் சிறுவர் நூலகப் பணியும் பயிற்சியும் பெற்றுவந்த பாக்கியநாதன் சிறுவர் நூலகத்தைப் பற்றிப் பத்திரிகைகளில் எழுதியதோடு, நகரத்திலும், நகர்ப் புறங்களிலும் நிலவிய பாடசாலைகளுள் ஐம்பது பாடசாலை அதிபர்களுக்குத் தகவல் கோரி எழுதியிருந்தார். பாக்கியநாதன் கோரிய தகவல்களுள் அவ்வப்பாடசாலையில் பயின்ற பாலர்களுள் ஐந்து வயது தொடக்கம் ஏழு வயது வரையுள்ளவர்கள், எட்டு வயது முதல் பதினொன்று வரையுள்ளவர்கள், பன்னிரண்டு முதல் பதின்னான்கு வரையுள்ளவர்கள் ஆண்கள் எத்தனை பேர், பெண்கள் எத்தனை பேர் ஆகிய பல்வகையான தகவல்களும் அடங்கும். அவர் கேட்டதற்குச் செவி கொடுத்து முப்பத்து நான்கு பாடசாலைகளின் அதிபர்கள் கண்ணியமாகத் தகவல் தந்தனர். அவர்கள் தந்தஒட்டு மொத்தக்கணக்கில் ஐந்து முதல் ஏழு வரை ஆண்கள் 2097, பெண்கள் 2259 எட்டு முதல் பதினொன்று வரை ஆண்கள் 2820, பெண்கள் 3062 பன்னிரண்டு முதல் பதினான்கு வரை ஆண்கள் 2423, பெண்கள் 2499 மொத்தமாக ஆண்கள் 7340, பெண்கள் 7820 ஆகும். விண்ணப்பத்தில் அறிந்த வண்ணம் 15,160 பிள்ளைகளுக்கு உடனடியாக நூலகத்தை உருவாக்க முடியாவிட்டாலும், குறைந்த அளவில் 70 அடி நீளமும், 15 அடி அகலமும், கொண்ட 1050 சதுர அடி பரப்புகொண்ட இடத்தை முதலில் ஒதுக்கலாம் என்று பாக்கியநாதன் நிர்வாக சபையிடம் கேட்டுக் கொண்டார். இதன்படியே சிறுவர் பகுதி தொடங்கப்பட்டது.

முன்னர் கூறியதுபோல் 11.10. 1959 அன்று நூலகத்தின் முதற் கட்டடம் பூர்த்தியாக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டது. 03.11.1967 அன்று செனட்டராகவும் உள்ளூராட்சி அமைச்சருமாக இருந்த மு.திருச்செல்வம் சிறுவர் பகுதியைத் திறந்து வைத்தார். 1971 இல் கேட்போர் கூடம், படிப்போர் கூடம் என்பனவும் அமைக்கப்பட்டு 1973இல் நூலகத்தின் இரண்டாவது கட்டடமும் பூர்த்தியாக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. இவ்வாறு பல பிரிவுகளுடன் யாழ் நூலகம் தன் சேவையை விஸ்தரித்துக்கொண்டது.

### தென் கிழக்காசியாவிலேயே சிறந்த நூலகம்

1970களில் இது தென் கிழக்காசியாவிலேயே சிறந்த நூலகமாக மாறியது. உடைமைகள் பாதுகாப்புப் பீடம், காட்சிக் கூடம், நூல் இரவல் வழங்கும் பகுதி, சிறுவர் பகுதி, வாசிகசாலைப் பகுதி, கேட்போர் கூடம், வலது குறைந்தோர் பகுதி, நூற் களஞ்சியப் பகுதி, உடனுதவும் பகுதி, விசேட சேர்க்கைப் பகுதி, கட்புல செவிப்புலப் பகுதி, படிப்போர் கூடம், நிர்வாகஸ்தர் பகுதி, கலைக் கூடம் எனப் பல பகுதிகள் அமைக்கப்பட்டன. நாடே இந்த நூலகத்தால் பயன் பெற்றது.

வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவரும், கூட்டுறவாளரும், மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபருமாகிய வீரசிங்கம் தமது மரணசாசனத்தில் யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்திற்கு 10000/= ரூபா சாட்டுதல் செய்திருந்தமையால் நூலகத்திற்கு ரூபா 10000/= நிதி கிடைத்தது. அவரை கௌரவித்து நினைவு கூரும் முகமாக அன்னாரின் உருவப்படம் யாழ்ப்பாணப் பொது சன நூலகத்தில் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. வீரசிங்கத்தைப்பற்றி கூறுவதானால் அவர் 1951 ஆம் ஆண்டில் ஆசிரியப் பணியில் இரு ந்து இளைப்பாறிய பின்னர் யாழ்ப்பாண மாவட்டத்துக்கான கூட்டுறவு இயக்கத்தின் முக்கிய பங்காற்றலானார்.

யாழ் மாவட்டத்துக்கான கூட்டுறவு சங்கத்தின் முதலாவது தலைவராக இவர் தேர்ந் தெடுக்கப்பட்டு இறக்கும் வரையில் அப்பதவியில் இருந்தார். யாழ்ப்பாண நகரில் கூட்டுறவுசங்கத்தினால் அமைக்கப்பட்டவீரசிங்கம் மண்டபத்திற்கு இவரதுநினைவாக அப்பெயர் சூட்டப்பட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலித் தாள்கள் புழக்கத்தில் விழிப்புடன் செயற்படுமாறு எச்சரிக்கை

(கொழும்பு)

**புதுவருட பண்டிகைக் காலத்தில் போலி நாணயத்தாள்கள் புழங்கலாம் என்றும் அது தொடர்பில் மக்கள் விழிப்புடன் செயற்படுமாறும் பொலிஸ் தலைமையகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

அவ்வாறான போலி நாணயத்தாள்கள் எவரது கையிலாவது கிடைத்தால் அருகாமையில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு அது தொடர்பில் அறிவிக்குமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். 1000 ரூபாய் போலி நாணயத்தாளை தம்வசம் வைத்திருந்த 28 வயது நபரொருவர் பனாகொட பகுதியில் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை 5000 ரூபாய் தொடர்பிலும் கவனமாக இருக்குமாறு அஜித் ரோஹண தெரிவித்தார். (நி-4)

# ஆலய வழிபாடு ஏன்-எதற்கு - எப்படி

## அற்புதமான ஆகமங்கள்

(தொடர்ச்சி)

விருத்தாசலத்தில் உள்ள விருத்தகிரீஸ்வரர் கோவிலில் 28 லிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு 28 ஆகமங்களின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளதைப் பார்க்க முடியும். இந்த 28 மூல ஆகமங்கள் தவிர 207 உப ஆகமங்கள் நடைமுறையில் உள்ளன.

வைணவத்தில் வைகானச ஆகமம், பாஞ்சராத்தர ஆகமம் என்று இரு வகைகள் இருக்கின்றன.

திருமாலின் அவதாரமாகக் கருதப்படும் விகனஸ் முனிவரால் வைகானச ஆகமம் இயற்றப்பட்டது. வைகானச ஆகமத்தைப் பின்பற்றுபவர்கள் கண்டிப்பாக வேதங்கள் கற்றவர்களாக இருத்தல் வேண்டும். வைகானச ஆகமத்தில் வேத மந்திரங்களும் ஆழ்வார்களின் பாடல்கள் தொகுப்பான நாலாயிர திவ்ய பிரபந்தப் பாசுரங்களும் பிரதான இடம் வகிக்கின்றன.

திருப்பதி, ஸ்ரீபெரும்புதூர் மற்றும் தமிழகத்தின் பெரும்பாலான வைணவ ஆலயங்களில் வைகானச ஆகம விதிகளே கடைப்பிடிக்கப்படுகின்றன. இந்த ஆகமத்தில் 60 உப ஆகமங்கள் உள்ளன.

மற்றொரு வைணவ ஆகமமான பாஞ்சராத்தர ஆகமம் என்பது சாண்டில்யர், ஞனபாக்யானர், மஞ்சியாயனர், கௌசிகர், பரத்வாஜர் ஆகிய 5 முனிவர்களுக்கும் இறைவனால் சொல்லப்பட்டதாகும்.

மகாவிஷ்ணு பரம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை ஆகிய 5 நிலைகளில் விளங்குவதைப் பஞ்சராத்தர ஆகமம் விளக்குகிறது. ராமானுஜர் காலத்தில் இந்த ஆகம விதிகள் மிகவும் போற்றப்பட்டன.

ஸ்ரீரங்கம் கோவிலில் முதலில் வைகானச ஆகமம்படியே பூஜைகள் நடந்து வந்தன. ராமானுஜர் அதைப் பாஞ்சராத்தர ஆகமத்துக்கு மாற்றினார். இதனால் ஸ்ரீரங்கம் கோவிலில் இன்றும் பாஞ்சராத்தர ஆகம விதிகள் படியே பூஜைகள் நடத்தப்படுகின்றன.

பாஞ்சராத்தர ஆகமத்துக்கு 108 உப ஆகமங்கள் உள்ளன. கும்பகோணம், காஞ்சிபுரம், திருமோகூர் ஆலயங்களில் பாஞ்சராத்தர உப ஆகமங்கள் படி வழிபாடு நடத்தப்படுகிறது. பாஞ்சராத்தர ஆகம வழிபாட்டு முறையில் பெரும்பாலும் திவ்ய பிரபந்தங்கள் பாடப்படும்.

சக்தி வழிபாட்டுக்கு 77 வகை ஆகமங்கள் உள்ளன. இந்த ஆகம விதிகள் அனைத்திலும் சக்திக்குச் செய்ய வேண்டிய பூஜை முறைகள் கூறப்பட்டுள்ளன. சைவம், வைணவம், சாக்தம் சமயங்களில் கூறப்படும் ஆகமங்கள் அனைத்தும் நமக்குக் கிடைக்கவில்லை. சில ஆகமங்களே கிடைத்துள்ளன. அதிலும் சில ஆகமங்களைத்தான் நாம் ஆலயப் பணிகளிலும் பூஜைகளிலும் கையாண்டு வருகிறோம்.

நம் முன்னோர்கள் கடைப்பிடித்த ஆகம விதிகளில் 90 சதவீதத்தை நாம் தற்போது கையாளவில்லை.

சில ஆகமங்கள் புத்தக வடிவில் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளதால் நடைமுறையில் நீடிக்கின்றன. பெரும்பாலான சிவாலயங்களில் கடைப்பிடிக்கப்படும் காமிகம் எனும் ஆகம விதிகளும் முருக வழிபாட்டில் உள்ள குமார தந்திர உப ஆகமமும் புத்தகமாக வந்ததால் நிறையப் பேரால் உணர்ந்து கடைப்பிடிக்கப்படுகிறது.

இவை தவிர இன்னும் நில ஆகமங்களும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. தமிழர்களுக்கும் தமிழர்களின் சமய சிந்தனைகளுக்கும் இவை சிறப்புச் சேர்ப்பவையாக உள்ளன.

ஆனால் ஆலய வழிபாடுகளின்போது பக்தர்களில் பெரும்பாலானவர்கள் ஆகம விதிகளைக் கண்டுகொள்வதில்லை. ஆகம விதிகளைத் தெரிந்து கொண்டு இறைவழிபாடு செய்யும் போது இறைவனிடம் அன்பால் நாம் அதிகமாக நெருங்க முடியும். (முற்றும்)

# செய்தித்துளிகள்

## சிறப்பு சோதனையின் போது 925 பேர் மேல் மாகாணத்தில் கைது

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு சோதனையின்போது பல்வேறு குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய 925 சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனின் உத்தரவுக்கு அமைவாகவே நேற்று முன்தினம் முற்பகல் 10 மணிமுதல் மாலை 5 மணிவரை இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் கைதான நபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-4)

## 'ஐஸ்'ஸுடன் அறுவர் கைது

(கொழும்பு)

ஜா.எல.நலவந்தம பகுதியில் 13 கிலோ கிராம் ஐஸ் எனப்படும் போதைப்பொருளுடன் ஆறு நபர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். நான்கு ஆண்களும் இரண்டு பெண்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதான சந்தேக நபர்கள் 24 முதல் 59 வயதுக்குட்பட்டவர்கள் என்பதுடன் இவர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியக அதிகாரிகள் முன்னெடுத்தனர். (நி-4)

## வீதி விபத்துகளில் சிக்கி 13 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் நேற்று முன்தினம் வீதி விபத்துக்கள் காரணமாக 13 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பண்டிகை காலத்தினைக் கருத்திற் கொண்டு போக்குவரத்து நடவடிக்கையில் ஈடுபடும் சாரதிகளும் பயணிகளும் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸார் வலியுறுத்தியுள்ளனர். (நி-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 180 | 240 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 180 | 200 |
| தக்காளி | 100 | 120 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 50 |
| கோவா | 120 | 100 | 140 |
| கரட் | 180 | 180-160 | 200 |
| பூசணி | 70 | 70 | 80 |
| புடோல் | 120 | 100 | 120 |
| வாழைக்காய் | 50 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 180 | 280 | 180 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 100 |
| பாகற்காய் | 250 | 200 | 240 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 150 | 140 | 150 |
| பயற்றங்காய் | 200 | 120 | 140 |
| லீக்ஸ் | 120 | 120 | 140 |
| பீற்றூட் | 100 | 100 | 120 |
| கறிமிளகாய் | 200 | 140 | 160 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 600 |
| போஞ்சி | 180 | 180 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 180 | 200 |
| கீரை – 1 பிடி | 40 | 50 | 50 |
| தேசிக்காய் | 140 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 60 | 50-80 |
| இராசவள்ளி | 150 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 200 | 120 | 280 |
| முள்ளங்கி | 50 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 40 |
| வல்லாரை | 60 | 20 | 30 |
| ஈரப்பலா | -- | 100 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## ஆயிரம் நாணயங்கள்



இதை சற்றும் எதிர்பாராத பக்கத்து வீட்டுக்காரர் முல்லாவிடம் சென்று இந்த பணப்பை என்னுடையது, நான்தான் உன் வீட்டிற்குள் தூக்கி எறிந்தேன் என்னிடம் குடுத்து விடு என முல்லாவிடம் கெஞ்சினார்.

ஆனால் முல்லாவோ கடவுள், "உன் மூலமாக எனக்கு உதவி செய்துள்ளார் என கூறி, உனக்கு குடுக்க இயலாது" என்று கூறிவிட்டார்.

வேறு வழி இல்லாமல் அந்த பக்கத்து வீட்டுக்காரர் பஞ்சாயத்துக்கு போகலாம் என்று முல்லா விடம் கூறிவிட்டார்.

ஆனால் முல்லாவோ, "எனக்கு உடல் நிலை சரி இல்லை, மேலும் என்னால் நடக்கவும் இயலாது", என்று கூறினார். அதற்கு அந்த பக்கத்து வீட்டுக்காரர், "என்னுடைய கழுதையை தருகிறேன் வா", என்று முல்லாவிடம் கூறினார்.

அதற்கு முல்லாவோ, என்னுடைய உடையை பார் அழுக்காக உள்ளது என்று கூறி, அவருடைய உடையையும் வாங்கிக் கொண்டு பஞ்சாயத்துக்கு சென்றார்.

இருவரும் நீதிபதியிடம் வந்து சேர்கின்றனர். நீதிபதி முழு கதையையும் கேட்டு அறிந்து கொண்டார். பின்னர்முல்லாவோ, நீதிபதி அவர்களே அவனை நம்பாதீர்கள்.

அவன் இப்பொழுது எல் லாம் மற்றவர்களின் பொருட்களை எல்லாம் தன்னுடையது என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்.

உங்களுக்கு நம்பிக்கை இல்லை என்றால் என்னுடைய துணியையும், எனக்கு பின்னல் நிற்கின்ற கழுதை இரண்டையும் என்னுடையது என்றே சொல்லுவான்.

அடுத்த நொடியே அந்த பக்கத்து வீட்டுக் காரர், முல்லா அணிந்துள்ள துணி மற்றும் அந்த கழுதை இரண்டு என் னுடையது என்று நீதிபதியிடம் கூறினான்.

நீதிபதி, பார்த்தீர்களா, எனக்கு இப்பொது புரிந்து விட்டது. முல்லா நீ உனது பணப்பையை எடுத்துச்செல்லலாம். இதைக் கேட்டு அந்த பக்கத்து வீட்டுக்காரர் தான் ஏமாற்றப்பட்டத்தை அறிந்து கண்ணீர் விட்டார். இறுதியில் முல்லா அந்த பணப்பையையும், அந்த கழுதையையும் எடுத்துக்கொண்டு இல்லம் நோக்கி நடந்தான்.

**நீதி: முட்டாள்தனம் இழப்பையே தரும்.**

(முற்றும்)

# மகாபாரதம்




அவனது தவத்தின் கடுமை அறிந்த சிவன் உமாமகேஸ்வரியிடம் "அருச்சுனன் தவத்தை அறிந்துகொண்ட துரியோதனன் அதை குலைக்க மூகாசுரனை ஏவுவான்.

அந்த அசுரனை என் ஒருத்தனால் மட்டுமே கொல்ல இயலும். அந்த அசுரன் காட்டுப்பன்றி வடிவம் தாங்கி அருச்சுன்னை கொல்ல வருவான். நான் வேடனாகப் போய் அவனைக் காப்பாற்றுவேன்" என்றார்.

அதேபோல மூகாசுரன் காட்டுப்பன்றியாய் வந்தான். அருச்சுனன் மீது அக்காட்டுப் பன்றி மோதியது.

அருச்சுனன் தவக் கோலம் நீங்கி தற்காப்புக்காக ஒரு அம்பு கொண்டு அவ்விலங்கை தாக்கினான்.

அப்போது ஒரு வேடன் தன் அம்பை அந்த பன்றியின் மேல் செலுத்த பன்றி வீழ்ந்தது. யாருடைய அம்பால் அப்படி நேர்ந்தது என்று சர்ச்சை எழ இருவரும் விற்போரில் ஈடுபட்டனர். அருச்சுனன் தோற்றான். உடன் மண்ணால் ஒரு சிவலிங்கத்தை அமைத்து பூமாலை ஒன்றை அணிவித்து பூஜித்தான்.

ஆனால் அம்மாலை வேடன் கழுத்தில் இருப்பதை அறிந்த அருச்சுனன் வேடனாக வந்தது சிவனே என்று அறிந்து வணங்கினான். சிவனும் அவனுக்கு பாசுபதக் கணையை வழங்கினார். அந்த அற்புதக் காட்சியைக் கண்ட தேவர்கள் பல்வேறு கருவிகளை அருச்சுனனுக்கு அளித்தனர்.

தன் மைந்தனின் பெருமையறிந்த தேவேந்திரன் அவனைத் தேவர் உலகத்திற்கு அழைத்தான். இந்திரன் கட்டளையால் அவனது சாரதி மாதலி அருச்சுனனை தேரில் நட்சத்திர மண்டலங்களைக் கடந்து அமராவதி நகருக்கு அழைத்துச் சென்றான்.

இந்திரன் தன் மகனை அரியணையில் அமர்த்தி சிறப்பு செய் தான். தெய்வீகக்கருவிகளைப் பயன்படுத்தும் முறை பற்றி அறிய ஐந்து ஆண்டுகள் தங்கி யிருக்க வேண்டும் என கட்டளையிட்டான் இந்திரன்.

நுண்கலைகளான நடனம், இசை ஆகிய வற்றிலும் அருச்சுனன் ஆற்றல் பெற அவ்னை சித்திரசேனனிடம் அனுப்பி வைத்தான். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை என்பது உட்கார்ந்து ஊஞ்சல் ஆடுவது அன்று; புயலுக்கு நடுவே படகைச் செலுத்துவது போன்றது. *– காண்டேகர்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## புத்தாண்டு கொண்டாட்டத்தில் கொரோனாவை மறக்கலாமோ!

நாளைய தினம் மலருகின்ற தமிழ் – சிங்களப் புத்தாண்டு முன்னம் போல களைகட்டவில்லையாயினும் புத்தாண்டுக் கொண்டாட்டம் என்றவுடன் எல்லாம் மறந்து போகின்ற நிலைமை ஏற்படவே செய்யும்.

பொதுவில் புத்தாண்டு பிறக்கின்றபோது பழையன மறந்து புதியதொரு உத்வேகத்துடன் எங்களைத் தயார்படுத்துவது கட்டாயமானது.

அதாவது எங்களை நாங்கள் மீள் உருவாக்கம் செய்வதென்பது அவசியமானது.

அந்தவகையில் பிறக்கின்ற புத்தாண்டில், மகிழ்வாக இருப்பதென்பது மிகவும் முக்கியமானது. குடும்ப உறவுகள் ஒன்றுசேர்ந்து புத்தாண்டைக் கொண்டாடி மகிழும்போது, எங்கள் உடலும் உள்ளமும் ஆறுதலும் தேறுதலும் பூரிப்பும் அடைகின்றது.

எனவே பிறக்கின்ற புத்தாண்டை வரவேற்று மகிழ்வாக இருப்பதை எவரும் தவிர்க்க வேண்டியதில்லை.

ஆனாலும் ஒரு விடயத்தை எப்போதும் நாம் மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்பதுதான் இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

அதாவது தற்போது வேகமெடுத்துள்ள கொரோனாத் தொற்று, எங்கள் வடபுலத்தைச் சுற்றிவளைத்துத் தாக்குதல் நடத்தத் தயாராக இருக்கிறது.

இதிலிருந்து எம்மை நாம் பாதுகாப்பதாயின், கொரோனாத் தொற்றில் இருந்து பாதுகாப்பதற்குரிய அத்தனை நடைமுறைகளையும் நாம் பின்பற்ற வேண்டும்.

அவ்வாறு பின்பற்றும்போதுதான் கொரோனாவை எங்கள் தாயகத்தில் இருந்து முற்றாக அகற்ற முடியும்.

எனினும் கொரோனாத் தொற்றுத் தொடர்பில் எங்களிடம் கவனக்கேடு ஏற்பட்டு விட்டது போல நாம் நடந்து கொள்வதுதான் மிகப் பெரும் அதிர்ச்சியைத் தருகிறது.

ஆம், இப்போதெல்லாம் யாழ்ப்பாண நகரம் மற்றும் திருநெல்வேலிப் பகுதிகளில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணமுள்ளது.

வர்த்தகம் மற்றும் சந்தை வியாபாரத்தில் ஈடுபடுபவர்களிடம் மேற்கொண்ட பிசிஆர் பரிசோதனையானது எங்களின் பாதுகாப்பை எச்சரிக்கைப்படுத்தியுள்ளது.

அதாவது கொரோனா விடயத்தில் எங்களின் பாதுகாப்பு நடவடிக்கைகள் திருப்தி யாக இல்லை என்பதைச் சுட்டி நிற்கிறது.

இந்நிலையில் புத்தாண்டுக் கொண்டாட்டத்தின்போது கொரோனாத் தொற்றை மறந்து நாம் செயற்படுவோமாக இருந்தால், நிலைமை படுமோசமாகும்.

ஆக, கொரோனாத் தொற்றின் ஆபத்துக் குறித்து நாம் பயம் கொள்ள வேண்டியதில்லையாயினும் பாதுகாப்பை உறுதி செய்து கொள்வது மிகமிகக் கட்டாயமானதாகும்.

### விடுமுறை எனப் பார்க்காது

# 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை தடையின்றி மக்களுக்கு வழங்குங்கள்

### அதிகாரிகளுக்கு அமைச்சர் டக்ளஸ் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு சமுர்த்தி பயனாளிகள் மற்றும் வாழ்வாதாரரீதியாக பாதிக்கப்பட்டிருக்கும் குடும்பங்களுக்கு 5 ரூபாய் கொடுப்பனவு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்நிலையில் நேற்று காலை தொடக்கம் நாடு முழுவதும் கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கும் நிலையில் 3 நாட்கள் தொடர் விடுமுறை என்ற போதும் யாழ்.மாவட்டத்தில் எந்த தடையும் இல்லாமல், கொடுப்பனவுகள் நடைபெறும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் சில பிரதேச செயலக அதிகாரிகள் மக்களுக்கான கொடுப்பனவை வழங்குவதில் அசமந்தமாக நடந்து கொண்ட நிலையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலையிட்டு கொடுப்பனவு மக்களுக்கு எந் தடையும் இல்லாமல் தொடர்ந்தும் வழங்கப்பட வேண்டும் என அறிவித்துள்ளதுடன், புத்தாண்டு விடுமுறை எனப் பார்க்காது கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும் என பணித்துள்ளார்.

மேலும் குறித்த 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கலில் குறைபாடுகள் இருப்பின் அதனை தமது கவனத்திற்கு கொண்டு வருமாறும் அமைச்சர் அறிவித்துள்ளார். (ம-3)

### வங்கியின் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த

# மோட்டார் சைக்கிளிலிருந்து 5 இலட்சம் ரூபாய் பணம் திருட்டு

### யாழ்.நகரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் வங்கியின் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் இருந்து 5 இலட்சம் ரூபாய் பணம் திருடப்பட்டுள்ளது.

யாழ்.நகரில் ஸ்ரான்லி வீதியில் உள்ள வங்கி ஒன்றில் பணம் வைப்பிலிடுவதற்காக வந்திருந்த நபர் தனது வெகோ மோட்டார் சைக்கிளின் இருக்கைக்கு கீழ் உள்ள களஞ்சிய பெட்டிக்குள் 5 இலட்சம் ரூபாய் பணத்தை வைத்து பூட்டி வங்கியின் முன்னால் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு வங்கிக்குள் சென்று தனது தேவையை நிறைவேற்றிய பின்னர், 5 இலட்சம் ரூபாய் பணத்தை வைப்பிலிடுவதற்காக மற்றொரு வங் கிக்கு சென்று களஞ்சிய பெட்டியை திறந்தபோது அங்கிருந்த பணம் காணாமல்போயுள்ளது.

உடனடியாக முன்னர் சென்றுவந்த வங்கிக்கு திரும்பி வந்து அருகில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த சீ.சி.ரி.வி கமராவை சோதித்தபோது, தொலைபேசியில் உரை யாடியபடி இளைஞன் ஒருவர் மோட்டார் சைக்கிளின் இருக்கையை கிளப்பி களஞ்சிய பெட்டியிலிருந்து பணத்தை சூறையாடுவது பதிவாகியுள்ளது.

இதனையடுத்து அந்த சீ.சி.ரி.வி கமரா பதிவுகளுடன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ம-3)

# நல்லிணக்க அடிப்படையிலேயே மணிவண்ணன் விடுதலை

### சட்டத்தரணி ரெமிடியஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன் கைது செய்யப்பட்டு நல்லிணக்க அடிப்படையிலே விடுவிக்கப்பட்டுள்ளதாக மாநகர சபை உறுப்பினர் சட்டத்தரணி ரெமிடியஸ் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார். இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், மாநகர முதல்வர் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு பின்னர் சாதாரண வழக் கிற்கு மாற்றப்பட்டு விடு விக்கப்பட்மை அரசின் நல்லிணக்க வெளிப்பாடாகும். மணிவண்ணனை விடுதலை செய்வதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியுடன் நேரடியாக பேசியிருந்தார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ம-3,104)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## வாழ்வதற்கு வேண்டிய தகுதி

❖ வாழ்க்கையில் எப்போதும் தூய்மை உடையவன் கடவுளுக்கு மிக நெருங்கியவனாகிறான்.

❖ ஏமாற்றுவதால் எதையும் செய்து விட முடியாது. அன்பாலும், ஆர்வத்தாலும், ஆன்மிக சக்தியாலுமே பெரிய செயல்களை நிறைவேற்ற முடியும்.

❖ பிறருக்காக செய்யும் சிறிய முயற்சி உள்ளிருக்கும் சக்தியை எழுப்புகிறது. பிறருக்காக நன்மையை எண்ணுவதால் சிங்கத்தின் பலம் இதயத்திற்கு கிடைக்கிறது.

❖ தன்னை அடக்கப் பழகிக் கொண்டவன் வேறு எதற்கும் வசப்படமாட்டான். அத்தகையவனே உலகில் வாழத் தகுதியுள்ளவன்.

❖ உங்களை ஓர் ஏழை என்று எப்போதும் நினைக்காதீர்கள். பணம் சக்தியல்ல, நன்மையும் தெய்வ பக்தியுமே சக்தி.

❖ தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளும் சக்தியை உண்டு பண்ணுவதே உண்மைக் கல்வி.

❖ அனைத்தையும் செவிசாய்த்துக் கேளுங்கள். உங்களுக்கு எது நல்லதென்று படுகிறதோ, அதை [illegible] பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்.

❖ [illegible] செயற்பட்டால், எந்தச் செயலையும் செய்து வெற்றி பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டுப் பலன்கள்

## 14.04.2021 முதல் 13.04.2022 வரை



### துலாம் இராசி வாசகர்களே!

பிறக்கும் புத்தாண்டு அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கத்தோடும் அஷ்டமத்தில் ராகு, செவ்வாய் சேர்க்கையோடும் இரண்டில் கேதுவின் சஞ்சாரத்தோடும் பிறப்பதால் விரயங்கள் அதிகரிக்கும். வீடு மாற்றங்களும் இடமாற்றங்களும் தானாக வந்து சேரும். தடைகளையும் தாமதங்களையும் தகர்த்து எறிய வேண்டுமானால் அவ்வப்போது திசாபுத்திக்கேற்ற தெய்வங்களை வழிபடுங்கள். ஆரோக்கியத்தில் சிறு அச்சுறுத்தல் ஏற்பட்டு அகலும்.

புத்தாண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன், புதனோடும் சூரியனோடும் இணைந்து சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். புத-சுக்கிர யோகம், புத -ஆதித்ய யோகம் ஆகியவற்றோடு, செவ்வாய், சுக்கிரன் பரிவர்த்தனை யோகமும் பெற்றிருக்கின்றது. அஷ்டமாதிபதி பரிவர்த்தனை பெறுவது அவ்வளவு நல்லதல்ல. எதிரிகளை நம்பி ஏமாறும் சூழ்நிலையும் தொழிலில் இழப்புகளும் ஏற்படலாம். வரவைக் காட்டிலும் செலவு இருமடங்காகும். 'வாங்கிய சொத்தை விற்க நேரிடுகிறதே' என்று கவலைப்படுவீர்கள். முன்னேற்றத்தில் குறுக்கீடு சக்திகள் அதிகரிக்கும். உடன்பிறப்புகளின் பகையை வளர்த்துக் கொள்ள வேண்டாம்.

2இல் கேது இருப்பதால் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது. குடும்பப் பிரச்சினை அதிகரிக்கும். உதவி செய்வதாகச் சொன்னவர்கள் கடைசி நேரத்தில் கையை விரிக்கலாம். குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு ஆரோக்கியத் தொல்லைகளும் வைத்தியச் செலவுகளும் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கும். சென்ற ஆண்டில் சேமித்த சேமிப்புகள் இப்பொழுது கரையத் தொடங்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது. உத்தியோகத்தில் பணியாளர்களால் தொல்லைகள் அதிகரிக்கும். தொழில் செய்பவர்களுக்கு பங்குதாரர்கள் பக்க பலமாக இருப்பது அரிது.

5 இல் குரு சஞ்சரிப்பதால் அதன் பார்வை உங்கள் இராசியில் பதிகின்றது. 'இராசிநாதன் சுக்கிரனுக்கு பகைக் கிரகமான குருவின் பார்வை பலன் தருமா?' என்று நீங்கள் நினைக்க வேண்டாம். 'குரு பார்க்க கோடி நன்மை' என்பதற்கு ஏற்ப, ஓரளவாவது தீமைக்கு நடுவில் நன்மை உருவாகும். மேலும் புத்திரகாரகன் குரு புத்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் போது பிள்ளைகளின் மேற்படிப்பு சம்பந்தமாகவோ, படிப்பிற்கேற்ற வேலை சம்பந்தமாகவோ நீங்கள் செய்யும் முயற்சியில் வெற்றி கிடைக்கும். 'எண்ணற்ற வரன்கள் வந்தும் இதுவரை ஒன்றும் முடிவடையவில்லையே' என்று கவலைப்பட்டவர்களுக்கு, இப்போது திருமண வாய்ப்பு கைகூடும்.

அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால் சுக ஸ்தானம் பலமிழக்கின்றது. எனவே ஆரோக்கியத்தில் தொல்லைகள் அதிகரிக்காமல் இருக்க வேண்டுமானால் ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்த வேண்டும். எந்த வேலையும் ஒரு முறைக்கு இருமுறை செய்ய வேண்டிய சூழ்நிலை உருவாகலாம். தொழில், உத்தியோகம் போன்றவற்றில் அதிக கவனம் செலுத்த வேண்டும். பிறரிடம் பொறுப்பை ஒப்படைக்கும் பொழுதோ, பொறுப்புச் சொல்லி தொகை வாங்கிக் கொடுக்கும் பொழுதோ ஒருகணம் சிந்திப்பது நல்லது.

### குருவின் வக்கிர இயக்கம்

ஆண்டின் தொடக்கம் முதல் 13.9.2021 வரை, கும்ப இராசியில் அதிசார கதியில் குருபகவான் சஞ்சரிக்கின்றார். 16.6.2021 முதல் வக்கிர இயக்கத்திலும் இருக்கின்றார். மீண்டும் 14.9.2021 முதல் 12.10.2021 வரை மகர இராசியில் குருபகவான் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். உங்கள் இராசியைப் பொறுத்தவரை 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குருபகவான். அவர் வக்கிரம் பெறுவது யோகம்தான். நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடிவரும். சகோதரர்கள் உங்கள் செயற்பாட்டிற்கு உறுதுணையாக இருப்பர். உத்தியோகத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைக்கும். வழக்குகள் சாதகமாக முடியும்.

## விழிப்புணர்வுடன் செயற்படுங்கள்

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

### குருப்பெயர்ச்சி காலம்

ஆண்டின் தொடக்கத்தில் கும்ப இராசியில் அதிசார கதியில் சஞ்சரிக்கும் குருபகவான், மீண்டும் வக்கிர கதியில் மகர இராசிக்கு வந்து, 13.11.2021 அன்று முறையாக கும்ப இராசிக்கு பெயர்ச்சியாகிறார். அதன்பிறகு 13.4.2022 இல் மீன இராசிக்குப் பெயர்ச்சியாகி செல்கின்றார். கும்பத்தில் குரு சஞ்சரிக்கும்பொழுது, அதன் பார்வை உங்கள் ராசியில் பதிவதோடு 9, 11 ஆகிய இடங்களிலும் பதிகின்றது. எனவே ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். உற்சாகத்துடன் பணிபுரிந்து உழைப்பால் உயர்வீர்கள். நல்ல இடமாற்றம், பணி மாற்றம் ஏற்படுவதோடு நம்பிக்கைகள் அனைத்தும் நடைபெறும். போட்டிகளில் வெற்றி கிடைக்கும். பேட்டி கொடுக்கும் அளவிற்கு பெரிய நிலையை அடைய சந்தர்ப்பங்கள் கைகூடிவரும்.

மீனத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, 6 ஆம் இடத்தில் குரு வருவதால் மீண்டும் பழைய பிரச்சினைகள் தலைதூக்கலாம். நட்பு பகையாகும். இல்லத்திலும், உள்ளத்திலும் அமைதி குறையலாம். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. முக்கியப் பிரமுகர்களை பகைத்துக் கொள்ள வேண்டாம்.

### ராகு-கேது பெயர்ச்சி காலம்

21.3.2022 அன்று மேடத்தில் ராகுவும் துலாத்தில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். உங்கள் இராசியைப் பொறுத்தவரை ஜென்மத்தில் கேதுவும் 7 ஆம் இடத்திற்கு ராகுவும் வருகிறார்கள். எனவே சர்ப்ப தோஷத்தின் ஆதிக்கத்தில் உங்கள் இராசி அமைகின்றது. ஏற்றமும், இறக்கமும் கலந்த வாழ்க்கையே அமையும். வரவைக் காட்டிலும் செலவு அதிகரிக்கலாம். ஒருதொகை செலவழிந்த பிறகே அடுத்த தொகை வந்து சேரும். வாய்ப்புகளில் ஒன்று இரண்டு கைநழுவிப் போகலாம். தொழில் கூட்டாளிகளிடம் கொஞ்சம் விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது. பயணங்களால் இடையூறுகள் உண்டு. ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். முல்றையாக சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை செய்து கொள்வதன் மூலம் முன்னேற்றத்திலுள்ள இடையூறுகள் அகலும்.

ஜென்ம கேதுவால் இடமாற்றம், ஊர்மாற்றம், வீடுமாற்றங்கள் வரலாம். இல்லத்தில் உள்ளவர்களின் அனுசரிப்பு குறையும்.

தொழில் ரீதியாக நீங்கள் எடுத்த முயற்சி, பொருளாதாரப் பற்றாக் குறையின்




காரணமாக பாதியிலேயே நின்று போகலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு கிடைப்பதில் தாமதம் ஏற்படும். எதையும் யோசித்து முடிவெடுப்பது நல்லது. இன்னல்கள் அனைத்தும் விலக ஒவ்வொரு வாரமும் நவக்கிரகத்தில் உள்ள கேது பகவானை நெய் தீபம் ஏற்றி வழிபட்டு வந்தால் ஓரளவு நன்மை கிடைக்கும்.

### சனியின் வக்கிர காலம்

12.5.2021 முதல் 26.9.2021 வரை, மகர இராசியில் சனிபகவான் வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு 4, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. சுகஸ்தானம் மற்றும் பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு அதிபதியான இவர் வக்கிரம். பெறுவது அவ்வளவு நல்லதல்ல. உடல்நிலையில் பாதிப்புகள் ஏற்பட்டு அகலும். வாகனங்களில் செல்லும் பொழுது கவனம் தேவை.

பூர்வீக சொத்துக்கள் சம்பந்தமான பஞ்சாயத்துக்கள் இழுபறி நிலையில் இருக்கும். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. திடீர் மாற்றங்கள் பலவற்றையும் சந்திக்க நேரிடும். விரயங்கள் கூடும். வீண் பிரச்சினைகள் பலவற்றையும் எதிர்கொள்ளும் சூழ்நிலை உண்டு. சனி பகவான் வழிபாடு உங்கள் சஞ்சலங்களைத் தீர்க்கும்.

### கவனமுடன் செயற்பட வேண்டிய காலம்

14.4.2021 முதல் 3.6.2021 வரை.

4.6.2021 முதல் 21.7.2021 வரை மற்றும் 26.10.2021 முதல் 7.12.2021 வரை, செவ்வாய் - சனி பார்வை உள்ளது. இக்காலத்தில் சகோதர ஒற்றுமை குறையும். வாழ்க்கைத் துணை வழியே பிரச்சினை அதிகரிக்கும் என்பதால் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுவது நல்லது. அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது. ஊர் மாற்றங்களும் வீடு மாற்றங்களும் திருப்தி அளிக்காது.

பிறருக்கு பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகையால் பிரச்சினைகள் ஏற்படும். அரைகுறையாக பல பணிகள் நிற்கலாம். பிறரிடம் கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகலாம். எதையும் யோசித்துச் செய்வதன் மூலமே காரியங்களில் வெற்றி காண இயலும்.

### பெண்களுக்கான பலன்கள்

இந்தப் புத்தாண்டு அதிக விரயங்களைச் சந்திக்கும் ஆண்டாக அமைகின்றது. மனக்குழப்பம் அதிகரிக்கும். உறவினர்களின் பகையால் ஒருசில நல்ல காரியங்கள் தடைபடலாம். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட அனுசரித்துச் செல்வது நல்லது. பிள்ளைகளாலும் தொல்லைகள் ஏற்படலாம்.

பெற்றோர் மற்றும் உடன்பிறப்புகளின் ஆதரவு, சென்ற ஆண்டைக் காட்டிலும் கொஞ்சம் குறைவாகவே கிடைக்கும். தன்னம்பிக்கையைத் தளரவிட வேண்டாம். பணிபுரியும் இடத்தில் பக்கத்தில் இருப்பவர்களால் சிக்கல்கள் ஏற்படலாம். சனீஸ்வரர் வழிபாடு சந்தோஷம் வழங்கும்.

### வளர்ச்சி தரும் வழிபாடு

இந்த ஆண்டு முழுவதும் சனிக்கிழமை தோறும் சனிபகவானை வழிபடுவதோடு, மூலநட்சத்திரம் வரும் நாளில் அனுமனுக்கு வெற்றிலை மாலை சூட்டி வழிபட்டால் தடைகள் அகலும். தகுந்த பலன் கிடைக்கும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வடக்கில் நேற்று...

வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றைய தினம் 406 பேருக்கு நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் வட மாகாணத்தில் 9 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களில் 8 பேர் யாழ்.மாவட்டத்தை சேர்ந்தவர்கள் எனவும், ஒருவர் முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்தவர் எனவும் போதனா வைத்தியசாலை தகவல்கள் கூறுகின்றன. (ம-3,18,33)

## யாழ்ப்பாண...

படுத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலைய சமூக சேவை பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவருக்கே நேற்று தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. (ம-3)

## போலிப் பிரசார...

வர அரசு தயாராகி வருகின்றது.

அதற்கமைய நீதி அமைச்சு மற்றும் வெகுசன ஊடக அமைச்சு இணைந்து சட்டக் கோவை ஒன்றை அறிமுகப்படுத்தவுள்ளது எனத் தெரிய வருகின்றது.

இந்த வாரம் நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம-3)

## அல்லாரையில்...

இளைஞர்களை ஆயுதக் குழுவொன்று வழிமறித்து தாக்குதல் நடத்தியதுடன் அவர்கள் பயணித்த பெறுமதியான மோட்டார் சைக்கிளையும் தீ வைத்து எரித்துள்ளது.

தென்மராட்சி அல்லாரை ஆலடி வெளிப் பகுதியில் நேற்று இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பூநகரிப் பகுதியில் இருந்து நிகழ்வொன்றிற்காக தென்மராட்சி வந்த இளைஞர்களை குறித்த குழு அல்லாரைப் பகுதியில் வைத்து மறித்து தாக்குதல் நடத்தியுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் அதனைக் கைவிட்டு விட்டு தப்பித்து ஓடியுள்ளனர்.

இதனால் குறித்த குழு அவர்கள் பயணித்த எவ்.சற் ரக மோட்டார் சைக்கிளை தீ வைத்து கொளுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதில் மோட்டார் சைக்கிள் முழுமையாக சேதமடைந்துள்ளது. (ம-3,30)

## முதியவரை...

ஒருவரை படுகொலை செய்த கொள்ளைக் கும்பல் ஒன்று வீட்டில் இருந்த பணம் நகைகளைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளது.

வயோதிபத் தம்பதியினர் தனித்திருந்த வீடொன்றுக்குள் நேற்று அதிகாலை பின் கதவு வாயிலாக நுழைந்த மூன்று பேர் அடங்கிய கொள்ளைக் கும்பல் ஒன்று தம்பதியினரை கட்டிவைத்து விட்டு வீட்டில் வைத்திருந்த இரண்டரை இலட்சம் ரூபாய் பெறுமதியிலான ஒரு சோடி காப்பினையும் மூதாட்டி அணிந்திருந்த ஒரு சோடி தோட்டினையும் அபகரித்துள்ளது.

இதன்போது முதியவர் கொள்ளையர்களை எதிர்த்து கூக்குரலிட்டபோது கொள்ளையர்கள் துணி ஒன்றினால் முதியவரின் கழுத்தை நெரித்து கொன்று விட்டு மூதாட்டியையும் கட்டிப்போட்டு விட்டு தப்பித்துச் சென்றுள்ளனர்.

மீசாலை கிழக்கு மீசாலை பகுதியைச் சேர்ந்த 80 வயதான செல்லையா சிவராசா என்ற முதியவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலைச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,18,30,33,60)

## திருநெல்வேலி...

வலயமாக கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி பொதுச் சந்தை மற்றும் சந்தையை சூழவுள்ள ஒரு தொகுதி வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கும் நிலையில் நேற்றுக் காலை தொடக்கம் பாற்பண்ணை பகுதியில் பாரதிபுரம் கிராமம் தவிர்ந்த மற்றைய பகுதிகள் கண்காணிப்பு வலயத்திலிருந்து நீக்கப்படும் எனவும் கண்காணிப்பு வலயத்திலிருந்து விடுவிக்கப்பட்ட பகுதி மக்கள் தமது அன்றாட கடமைகளை வழக்கம்போல் மேற்கொள்ளலாம் எனவும் அறிவித் திருந்தார்.

எனினும் நேற்று வரை இராணுவம் மற்றும் பொலிஸார் வெளியேறாததுடன் மக்களின் நடமாட்டம் தொடர்ந்தும் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது. இதனால் தமது வாழ்வாதாரம் தொடர்ந்தும் பாதிக்கப்படுவதாக மக்கள் குற்றஞ் சாட்டியிருக்கின்றனர்.

தொடர்ந்தும் கட்டுப்பாடுகள் இறுக்கமாக இருக்கும் நிலையில் தமக்கு விடுவிப்பதற்கான கட்டளை கிடைக்கவில்லை என இராணுவம் மற்றும் பொலிஸார் கூறியிருக்கின்றனர். (ம-3,33)

## வடக்கு உட்பட...

வடமேல் மாகாணம், வட மாகாணம் மற்றும் காலி, மாத்தறை அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பகுதிகளில் கடுமையான மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் கடுமையான இடிமுழக்கம் மற்றும் மின்னல் தாக்கம் இருக்குமெனவும் மக்களை அவதானமாக இருக்குமாறும் 'வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-3)

## வாந்தி எடுத்த...

பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதில் கோப்பாய் இராச வீதியைச் சேர்ந்த குலதீஸ்வரன் விபிசன் (வயது-26) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞன் கடந்த 9ஆம் திகதி வெற்றிலை போட்டுக் கொண்டு கடையொன்றில் சோடா குடிப்பதற்காக தண்ணீரால் வாயைக் கொப்பளித்தபோது வாந்தி எடுத்து மயக்கமடைந்திருந்தார்.

உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோதும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவரது மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## குற்றங்கள்...

இந்த சமர்ப்பிப்பு தற்போதைய இலங்கையின் இராணுவத் தளபதியாக இருக்கும் சவேந்திர சில்வா 06 யூலை 2020 இல் உருவாக்கப்பட்ட ஐக்கிய இராச்சியத்தின் உலகளாவிய மனித உரிமைகள் (GHR) தடை பொறிமுறையின் கீழ் ஏன் கண்டிக்கப்பட வேண்டும் என வாதிடுகின்றது.

"எங்களிடம் இலங்கையின் போரின் இறுதிக்கட்டம் பற்றி கவனமான முறையில் சர்வதேச வழக்கறிஞர்கள் மற்றும் சட்டவாளர்கள் மூலம் சேகரித்த ஆதாரங்களைக் கொண்ட விரிவான களஞ்சியம் ஒன்று உள்ளது. இங்கிலாந்தில் தற்போதுள்ள பல பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்கள் இந்த சமர்ப்பிப்பை உருவாக்குவதற்கும் சவேந்திர சில்வா மற்றும் அவரது கட்டளைக்கு கீழ் இருந்தவர்களுடனும் இணைப்புகளை உருவாக்குவதற்கும் மிகவும் முக்கியமானதாக இருந்தது" என சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்ட அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வடக்கில் 2009 இல் இடம்பெற்ற சிவில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தின் போது 58 ஆவது படைப் பிரிவின் கட்டளைத் தளபதியாக இருந்தபோது சவேந்திர சில்வா [illegible] பாரிய மனித உரிமை மீறல்களை மேற்கொள்வதில் அவரது பங்கு குறித்து சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டத்தின் இந்த சமர்ப்பிப்பு விபரித்துக் கூறுகிறது.

அது பாதுகாப்பு வலயங்கள் எனக் கூறப்பட்ட இடங்களில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட வைத்தியசாலைகள் மற்றும் உணவுக்காக வரிசையில் நின்றவர்கள் மீதான எறிகணை மற்றும் குண்டுத் தாக்குதலில் உயிர்தப்பிய தமிழர்களின் கொடுமை நிறைந்த நேரில் கண்ட சாட்சி வாக்குமூலத்திலிருந்து இந்த சமர்ப்பிப்பு உருவாகிறது.

இவர்களில் பலர் தற்போது இங்கிலாந்தில் அகதிகளாக வாழ்ந்து வருகிறார்கள். இங்கிலாந்து அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கையின் முக்கிய பகுதியாக உள்ள பாலியல் வன்புணர்வு உட்பட பாலியல் வன்முறை மற்றும் சித்திரவதையில் சில்வாவின் தொடர்பினை இந்த சமர்ப்பிப்பு கவனமாக ஆராய்கின்றது.

"2020இல் அமெரிக்காவின் இராஜாங்க திணைக்களம் போரின் முடிவில் இடம்பெற்ற மீறல்கள் குறித்து கூறப்பட்ட அவரது வகிபாகத்திற்காக அவரைக் கடுமையாக கண்டனம் செய்தது. ஆனால் இங்கிலாந்தின் தடைபொறிமுறையின் அதிகாரவரம்பு வேலைகள் விரிவானதாக இருப்பதுடன் இராணுவத் தாக்குதலின் போது வைத்தியசாலைகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட ஏனைய பொதுமக்களின் இடங்கள் மீதான எறிகணைத் தாக்குதலில் அவரது பங்கினை உள்ளடக்குகிறது.

மீறல்களை முழுமையாக அங்கீகரித்தல் மற்றும் அமெரிக்காவின் நடவடிக்கைக்கு ஆதரவு கொடுத்தல் என்பன முக்கியமானது என சூக்கா கருத்து தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவின் கண்டனம் பொறுப்புக்கூறல் தொடர்பில் இன்னுமொரு முக்கிய முன்னோக்கிய படியாக இருக்கும். அத்துடன் அண்மை 20

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1675 திகதி 2021.04.12
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 09 16 68 95
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 12/04/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0814
வெற்றி எழுத்து P சுப்பர் இலக்க 17
வெற்றி இலக்கங்கள் 01 36 45 75

மஹஜன சம்பத
திகதி 2021/04/12
சீட்டிழுப்பு இலக்கம் 4455
ஆங்கில எழுத்து 0
வெல்லப்பட்ட இலக்கங்கள் 9 8 5 7 0 1
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 12.04.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2750
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 04 24 42 68
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2021.04.12
சீட்டிழுப்பு இலக்கம் - 492
W 10 16 31 67
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1251
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 12.04.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 128,172,775
வெற்றி இலக்கங்கள் 22 43 54 74
ஆங்கில எழுத்து L
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
கிழமை: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 3581
வர்ணம் : கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 12.04.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 36,379,854
வெற்றி இலக்கங்கள் 45 57 70 75
ஆங்கில எழுத்து L
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் 2,435,869/=
திகதி : 12.04.2021
வெற்றி வாரம் : 3132
வர்ணம் : மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 06 23 25 45
கடகம்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,165,900

SUPER BALL சுப்பர் போல்
சீட்டிழுப்பு வாரம் 1425
நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 12/04/2021
தினம் திங்கட்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் S 05 45 56 62
அடுத்த சுப்பர் ஜக்பொட் 51,997,907/=
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1749
சீட்டிழுப்பு திகதி 12.04.2021
வெற்றி இலக்கங்கள் 07 50 55 69
ஆங்கில எழுத்து V
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 24,244,516
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுமந்திரனை கொல்ல சதி

# பாதாள உலகத் தலைவன் உள்ளிட்ட 11 பேர் விடுவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரனை கொலை செய்ய சதித் திட்டம் தீட்டியமை, ஆயுத வர்த்தகம் செய்தமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைத்து விசாரிக்கப்பட்ட பிரபல பாதாள உலகக்குழு தலைவரான 'கனேமுல்ல சஞ்சீவ' அல்லது " மாலிங்கமுவே சஞ்ச்ஜீவ " எனப்படும் சஞ்சீவ சமரரத்ன உள்ளிட்ட 11 சந்தேகநபர்கள் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தினால் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

குறித்த வழக்கு நேற்று கொழும்பு பிரதான நீதவான் புத்திக ரீராகல முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே இந்த 11 பேரையும் விடுதலை செய்வதாக நீதவான் அறிவித்தார்.

தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பினால் க்டந்த யுத்த காலத்தில் வடக்கு, கிழக்கில் புதைக்கப்பட்டிருந்த கிளைமோர் குண்டுகள், ரீ 56 ரக துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்களை தோண்டியெடுத்து கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளுக்கு கடத்தி இரகசியமான முறையில் பாதாள உலகக்குழு உறுப்பினர்களுக்கு விற்பனை செய்தமை மற்றும் கொள்வனவு செய்தமை, பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனை கொலை செய்ய சதி செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் இந்த விசாரணைகள் இடம்பெற்று வந்தன. (ம-03)

## தெல்லிப்பழை யூனியன் கல்லூரி

# மாணவர்கள் தாக்கப்பட்டமைக்கு உருத்திர சேனை அமைப்பு கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்கள் மீது கிறிஸ்தவ மிசனறிக் குழுவினர் மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதலிற்கு உருத்திர சேனை அமைப்பு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் உருத்திர சேனை அமைப்பு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

சைவ மாணவர்கள் பெரும்பான்மையாக கல்வி கற்கும் பாடசாலையில் நடத்தப்பட்ட குறித்த தாக்குதல் சைவத்தின் மீதும் சைவ மாணவர்களின் மீதும் நடத்தப்பட்ட தாக்குதலா என்ற ஐயம் பெரும்பான்மையான சைவர்கள் மத்தியில் தோன்றியுள்ளது. ஆயினும் சைவ மக்கள் இலங்கை தாய் நாட்டின் சட்டத்தின் மேல் உள்ள நம்பிக்கையால் தாங்கள் சட்டத்தினை கையில் எடுக்காமல் அமைதிகாத்தனர்.

எனினும் இதே பொறுமையை தொடர்ந்து மாணவர்கள் கடைப்பிடிப்பார்களா? என்பது சந்தேகந்தான். எனவே குறித்த தாக்குதலில் ஈடுபட்ட பாதிரியார் குழுவினர் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனவும் உருத்திர சேனை அமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது. (ம-03)

காணி விற்பனைக்கு

பருத்தித்துறை நகருக்கு அண்மையில் தும்பளை வீதிக்கு அருகில் உட்புறமாக 2 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (C-1965)

077 436 6704, 077 179 1963

## அச்சுவேலி வைத்தியசாலையில் ஒருவருக்கு தொற்று

# வைத்தியர் உட்பட உத்தியோகத்தர்கள் ஆறுபேர் தனிமைப்படுத்தப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அச்சுவேலி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற நபர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் வைத்தியசாலையின் வைத்தியர், தாதி, ஊழியர்கள் நால்வர் உட்பட ஆறு பேர் தனிமைப்பட்டுள்ளனர். குறித்த தகவலை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் உறுதிப்படுத்தினர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று கடந்தவாரம் வீடு திரும்பியிருந்த நபர் ஒருவர் மீண்டும் நோய் அறிகுறி காணப்பட்ட நிலையில் நேற்று அச்சுவேலி வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக சென்றிருக்கின்றார்.

அவருக்கு கொரோனா தொற்று அறிகுறி காணப்பட்டமையை அடுத்து நோயாளர் காவு வண்டி மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

அங்கு அவருக்குமேற் கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதனை அடுத்து அவருக்கு சிகிச்சை வழங்கிய அச்சுவேலி வைத்தியசாலை வைத்தியர், தாதி ஊழியர்கள் 04 பேர் என ஆறு பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ம-03,33)

வேலையாள் தேவை

யாழ். திருநெல்வேலியிலுள்ள எமது கட்டடத்திற்கு மின் இணைப்பு, பிளம்பிங் தெரிந்தவர்கள் தேவை. நாளாந்த சம்பள அடிப்படையில் வேலை செய்வது விரும்பத்தக்கது. (6569)

077 105 6694

உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் (C-1895)
V2 TRAVELS

எமது கிளைகள்
கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர்

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 15'000/-
பயிற்சியின்போது - 10'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0777-068-777
v2vacancies@gmail.com

## குற்றங்கள்...

யில் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவானதாக இருக்கும். இதற்காக பிரிட்டனே முக்கிய பங்கு வகித்தது என அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கைக்கு இங்கிலாந்தின் புதிய தடை பொறிமுறையினை பிரயோகிப்பது தொடர்பிலான அரசியல் விருப்பம் அண்மைய பாராளுமன்ற விவாதத்தின் போது வெளிபடையாக தெரிந்தது, இந்த விவாதத்தில் பதினொரு பாராளுமன்ற உறுப்பினர்கள் சவேந்திர சில்வா உட்பட இலங்கையின் இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக இங்கிலாந்து அரசாங்கம் ஏன் தடைகளை விதிக்கவில்லை? எனக் கேட்கிறார்கள் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-3)

## மின்சாரம்...

நல்லூர் அரச வீதி பண்டார குள பிள்ளையார் கோவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தைச சேர்ந்த இராசகுலேந்திரன் நிசாந்தன் (வயது-30) என்ற இளம் குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார். (ம-3)

## சாவகச்...

உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த பேருந்து சாவகச்சேரி நகரில் வீதிஎ்ய கடக்க முயன்ற நபர் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. (ம-3)

ஊர் கோழிக் குஞ்சு விற்பனைக்கு

1 மாதமான ஊர் கோழிக்குஞ்சு - 175 /=
2 கிழமையான ஊர் கோழிக்குஞ்சு 140 /=
( கழுத்து வெட்டியும் உண்டு. )

தொடர்பு (6570)

077 477 5603

விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி
(C-1925)

0768226240 DHL

விற்பனைக்கு

புத்தம் புதிய பதிவு செய்யப்படாத TVS முச்சக்கரவண்டிகள் விற்பனைக்கு உண்டு.
( குறைந்தளவு கையிருப்புக்கள் மாத்திரமே. ) (C-1961)

077 715 1101, 077 129 0712

அன்னா EXPRESS
விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்
லண்டன் 1000/= (C-1927)
070 3305500
077 888 9388

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்
சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை
பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை
மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

UK Visa Consultants Service

தற்பொழுது எமது Sun Travels நிறுவனத்தின் ஊடாக UK Tourist visa, திருமணம் முடித்து செல்பவர்களுக்கான Settlement visa, work visa, Student visa, லண்டன் சென்று திருமணம் முடிப்பதற்கான 6 மாதத்திற்கான திருமணத்திற்கான Marriage visit visa போன்ற visa சேவையினை தற்பொழுது யாழ்ப்பாணத்திலே எமது நிறுவனத்தின் ஊடாக விண்ணப்பம் செய்து எமது நிறுவனத்திலேயே visa வைப் பெற்றுக்கொள்ளமுடியும். (6566)

இல 269, Sun Shoping Mall (Sun Travels)
கெற்றப்போல் சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி.
077 936 1427/077 225 9030




கணக்கீடு
Accounting

A/L 2021 (துரித மீட்டல்)
A/L 2022
A/L 2023
குழு மற்றும் தனி வகுப்புக்கள்
தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான (6556)

ஆசிரியர் : P.அஜந்தன்
M.Bus (Accounting)®,
B.B.A,MAAT, CIMA (MGT)

077 989 5183

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.